756

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923ஹு ஜூன்மீ 1வ [பகுதி 5.

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"குடும்பசாபம்" யென்னும் நாவல்

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

3-AUG 1923

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923௵ மார்ச்சு௴ 1௳ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

செய்தாள். அவன் சற்று உற்றுப்பார்த்தபோது அவள் தான் கோயிலில் இருமுறைகண்ட அந்த அழகுவாய்ந்த கன்னிகையே என்று தெரிந்ததும் மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்ததோடு அவள் காட்டும் சமிக்கையால் அவள் அங்கு சிறையாக்கப்பட்டிருக்கிறாளென்றும், தன்னைக் காப்பாற்றும்படி சமிக்கைசெய்கிறாளென்றும் அவனுக்கு விளங்கியது.

அவன் உடனே மதில் சுவர் ஓரத்தில் இருந்த ஒரு மரத்தின் மேலேறி உட்பக்கம் தாழ்ந்து சென்ற ஒரு கிளை வழியாயிறங்கித் தோட்டத்திற்குள் குதித்து, அக்கன்னிகை யிருக்கும் சாளரத்தின் கீழ்ச்சென்றான். அக்கன்னிகை "என்னை யெப்படியாவது காப்பாற்றும், எப்படியாவது காப்பாற்றும்" என்று பரிதாபமாய்க்கெஞ்சினாள். வில்வநாதன் "கன்னிகையே! உன்னைக்காப்பாற்றுவதில் என் பிராணனை யிழந்து விடவும் நான் ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் நீ யிருக்கும் அறைக்கு நான் எப்படி வரலாகும். அதைமட்டும் எனக்கு அறிவிக்கவேண்டும்" என்றான்.

அக்கன்னிகை துஷ்டகேதுவால் சிறைவைக்கப்பட்டிருக்கும் நமது குசலாம்பாளே யென்று நேயர்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள். அவள் வில்வநாதனை நோக்கி "அந்தோ! என் அறை பூட்டப்பட்டிருக்கிறது. நான் எவ்வித உதவியும் செய்யக்கூடிய நிலைமையிலில்லையே" என்றாள். வில்வநாதன் "[illegible] வாயிற்படி வழியாய் நுழைந்து யார் எதிர்த்தாலும் ஒருகை பார்த்துக்கொண்டு உன் அறைக்கு வந்து உன்னைக்காப்பாற்றுகிறேன்" என்று கூறிவிட்டுத் தன் குத்துவாளைக் கரத்தில் எடுத்துக்கொண்டு துரிதமாய்க் கட்டிடத்தின் முன் பக்கம் இருக்கும் வாயிற்படியை நோக்கி நடந்தான்.

186490.

ஆனால் அவன் அப்படி முன் பக்கம் திரும்பும் போது திடீலென்று தன் எதிரில் துஷ்டகேது வருவதைக்கண்டான். துஷ்டகேது அவனை நோக்கியதும் "அன்றிரவு நம்மோடு சண்டை யிட்ட எதிரி" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு வில்வநாதனை நோக்கி "ஓ வாலிபரே! என்ன விசேஷமாய் இங்கு வந்தீர்?" என்று கேட்டான்.

வில்வநாதன்:—"பிரபுவே! இந்த வீட்டில் ஒரு கன்னிகை அவள் பிரியத்திற்கு மாறாகச் சிறைவைக்கப் பட்டிருக்கிறாள். நான் அவளை மீட்டு விடுவது அல்லது அந்த முயற்சியில் பிராணனையேனும் விடுவது என்று பிரதிக்ஞை செய்துகொண் டிருக்கிறேன்" என்றான். துஷ்டகேது "அப்படியானால் இரண்டொருநிமிடங்களில் நீ உன் பிராணனை யிழந்து விடுவதே நிச்சயம்" என்று தன் வாளையுருவிக்கொண்டு சண்டையிட ஆயத்தமானான்.

வில்வநாதன்:—"பிரபுவே! உன்னிடத்தி லிருப்பது பெரிய உடைவாள். என்னிடமிருப்பது சிறிய குத்துவாள். இப்படிச்சம ஆயுதமில்லாத அநீதப் போர் புரியப்பிரியப்படுகிறீரோ?" என்றான்.

துஷ்டகேது "ஆ! இவனே இக்கன்னிகையின் காதலில் நமக்குப்போட்டிக்காரன்" என்று கருதியதால் மிக்க கோபமுடையவனாகி "ஆம். உன்போன்ற கள்ளப் பயலைக்கொல்ல..." என்று கூறிக்கொண்டே வாளை யோங்கி வாலிபனைத்தாக்கினான். வாலிபன் சாமார்த்மாய் விலகித் தப்பித்துக்கொண்டான்.

துஷ்டகேது முன்முறை வில்வநாதனோடு சண்டையிடும்போது கொண்டிருந்த ஆரத்திரத்தை விட அதிக ஆத்திரத்தோடு இப்போது சண்டையிட்டான். இரு

வரும் சண்டை யிட்டுக்கொண்டே கட்டிடத்தின் பின் பக்கம் திரும்பிவிட்டார்கள். குசலாம்பாள் சாளரத்தி லிருந்து இவர்கள் தன் பொருட்டாக இப்படி உயிருக் குத்துணிந்து சண்டையிடுவதைக் கண்டதே கோவென் றலறினள். சுமார் பத்து நிமிடங்கள் இருவரும் சண்டை யிட்டபோது, துஷ்டகேது வில்வநாதனைக் குத்துவதற் காகப் பாய்ந்து வந்தான். வில்வநாதன் அவன் கத்தி யைத் தட்டி விட்டதும் உடனே பாய்ந்து தன் குத்து வாளின் அலகைக் கரத்தில் பிடித்துக்கொண்டு அதன் கைப்பிடியால் துஷ்டகேதுவின் நெற்றி மேல் ஓங்கிப் பலமாய் அடித்தான். துஷ்டகேது உடனே ஸ்மரணை யிழந்து அடியற்றமரம்போல் பூமியில் வீழ்ந்தான்.

வில்வநாதன் உடனே அவனுடைய வாளை யெடுத்துக் கொண்டு, துரிதமாய்க் குனிந்துபார்த்து அவன் இறந்து போகவில்லை யென் றறிந்துகொண்டு கன்னிகையை நோக்கி வாயிற்படிவழியாக வருகிறேன் என்று கூறி விட்டுத் துரிதமாய் ஓடி மாளிகைக்குள் நுழைந்தான். இவன் முன் கூடத்தில் சென்றபோது அங்கிருந்த ஒரு வேலைக்காரச்சிறுவன் "யார் நீ? எங்கே செல்கிறாய்?" என்றான். வில்வநாதன் போ எட்டவென்று கத்தியை யோங்கியதும் அவன் ஓட்டம்பிடித்தான். வில்வநாதன் உடனே மேல் மாடிக்குச்சென்று குறிப்பாய்க் குசலாம் பாளிருக்கும் அறையைக் கண்டுகொண்டு அங்கு சென்ற போது அது பூட்டப்பட்டிருக்கக்கண்டான். ஆயினும் அங்கு எதிரில் ஒரு பலகையாசனம் இருக்கக்கண்டு அதை யெடுத்துக் கதவின் மேல் மோதி யடிக்கக் கதவு உடைந்து திறந்துகொண்டது.

மறுநிமிடம் உள்ளிருந்த குசலாம்பாள் சந்தோஷக் கூச்சலிட்டுக்கொண்டு பாய்ந்தோடி வந்து அவனைக்

கெட்டியாய்ப் பற்றிக்கொண்டாள். வில்வநாதன் இரண்டொருவார்த்தைகளால் அவளுக்குத் தேறுதல் கூறி "இனி நாம் ஒரு விநாடியேனும் ஆலசியம் செய்யலாகாது" என்று கூறிக்கொண்டே அவளை யழைத்துக் கொண்டு படிகளின் வழியாய்க் கீழிறங்கினான். அவன் அடிப்படியையடைந்தபோது அவ்வீட்டிலிருந்த மூதாட்டியும் ஒருவேலைக்காரனும் அங்கு வந்தார்கள். மூதாட்டி வில்வநாதன் கையிலிருந்த ஒங்கிய வாளையும் அவன் துணிகரமான கோபாவேசத்தையும் கண்டதே அலறிக்கொண்டு ஓட்டம் பிடித்தாள். வேலைக்காரன் நிராயுதனாயிருப்பினும் ஒரு பாய்ச்சலாகப்பாய்ந்து வில்வநாதனுடைய வாளேந்திய கரத்தைப்பிடித்துக்கொள்ள முயன்றான். ஆனால் அவன் அம்முயற்சியில் தவறிவிடவே வில்வநாதன் அவனைப்படிக்கட்டுகளின் மேலேறியோடும்படித் துரத்திவிட்டுக் குசலாம்பாளை யழைத்துக்கொண்டு துரிதமாய் வீட்டிலிருந்து வெளிப்பட்டு எதிர்ப்பக்கம் தோட்டத்திலிருந்த வாயிற்படியில் நுழைந்து இராஜபாட்டையில் பிரவேசித்ததும், இருவரும் துரிதமாய்த்திரும்பிப் பாராமல் நடந்தார்கள்.

இவர்கள் சுமார் இருநூறு கஜதூரம் சென்றபோது பின்னாலிருந்து "அடே நில்லுங்கள் நில்லுங்கள்" என்று யாரோ அதட்டிக்கூவும் சத்தம்கேட்டதும் திரும்பிப் பார்த்தார்கள். உடனே துஷ்டகேதுவும் அவனுடைய ஆட்கள் இருவரும் துரிதமாய்க் குதிரைகளின் மேல் ஏறி வருவதைக் கண்டார்கள். கன்னிகை "அய்யோவென்றலறிக்கொண்டு வில்வநாதனைக் கெட்டியாய்ப்பற்றிக் கொண்டாள். வில்வநாதனும் "மூவர்களோடு நாம் ஒருவன் எவ்வாறு சண்டையிடமுடியும்?" என்று திகிலடைந்தான், ஆனால் அச்சமயம் தெய்வகெதியாய் அவன்

மனதில் ஒரு நினைவு உதித்தது. உடனே "ஆ கடவுளே! இதுதான் அதன் உண்மையைச் சோதிக்கவும் தகுதியான சமயம்" என்று கூறிக்கொண்டே மாயசிங்கனளித்த ஊதுகுழலை யெடுத்துப்பலங்கொண்டமட்டும் கெட்டியாய் ஊதினான். அச்சத்தம் தூரத்திலுள்ள குன்றுகளில் தாக்கிப் பிரதித்தொனி யுண்டாயிற்று. அத்தொனி ஓயு முன்பே தூரத்தில் குதிரைகள் வேகமாய் வரும் சத்தம் கேட்டது.

துஷ்டகேதுவும் அவன் ஆட்களும் சற்று நேரத்திற்குள் பின் பக்கமிருந்து இவர்களருகில் நெருங்கிவிட்டார்கள், மறுகிமிடம் நான்கு குதிரை வீரர்கள் பூரண ஆயுதங்களணிந்தவர்கள் முன்பக்கமிருந்து இவர்களருகில் வந்து விட்டார்கள். நால்வரில் முன் வந்தவன் தன் சிரசில் அணிந்திருந்த இறகுகளால் அவனே அவர்கள் தலைவனென்று தெரிந்தது. இவர்களருகில் வந்ததும் அவன் குதிரையினின்றும் இழிந்தான். உடனே மற்ற மூவரும் இழிந்தார்கள். வில்வநாதன் உடனே அத்தலைவன் நமது மாயசிங்கனே என்றறிந்து கொண்டு தலைவனே உனக்கு மிக்க நன்றியோடு வந்தனமளிக்கிறேன் என்றான்.

துஷ்டகேது "தலைவனே! எனக்கும் இக்கன்னிகைக்கும் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் நீ தலையிடாதே. இந்தத்துஷ்டப்பயலைப் பற்றி..." என்பதற்குள், வில்வநாதன் "இத்துஷ்டப்பயல்தான் இரண்டு முறையும் கொட்டத்தை யடக்கினன் என்பதை மறந்து விட்டீரோ பிரபுவே" என்றான். மாயசிங்கன் "பிரபுவே! நான் கூறுவது ஒரு வார்த்தையே; வலிவுள்ளவர்கள் வலிவில்லாதவர்களுக்கு அக்கிரமம் செய்வதாயின் அச்சந்தர்ப்பத்தில் அவன் இராஜகுமாரனாயினும் சரி, சுத்த அனு

தைச் சிறுவனுகிய எளியவனுயினும் சரி எனக்கு ஒன்றே. இங்கே நடக்கும் விஷயம் இன்னதென்னப் பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது. இந்தவாலிபன் ஒரு போதும் நெறி தவறி நடவான். இக்கன்னிகை அன்போடும் நம்பிக்கையோடும் அவனைப்பற்றிக்கொண் டிருக்கிருள். உம்மை மிக்க நடுக்கத்தோடும் வெறுப்போடும் நோக்குகிருள். இதற்குமேல் இதைப்பற்றி விவரம் கேட்கவேண்டுவதில்லை'' என்று கூறிவிட்டுத் தன் ஆட்களில் ஒருவனுக்கு ஒருவிதச் சமிக்கை செய்தான். அவ்வீரன் உடனே ஒரு குதிரையைப் பிடித்து வந்து வில்வநாதனருகில் நிறுத்தினன்.

மாயசிங்கன் வில்வநாதனை நோக்கி "வாலிபனே! இக் குதிரையை நீயே யுபயோகப்படுத்திக்கொள். கன்னிகையும் நீயும் இதில் ஏறிக்கொள்ளுங்கள்'' என்றுன். அவ்வாறே யிருவரும் ஏறிக்கொண்டபின் வீரரில் இருவர் ஒரு குதிரை மேலும் மற்ற இருவரும் இருபுரவிகள் மேலும் ஏறிக்கொண்டதும் அவர்கள் உடனே நகர வழியே துரிதமாய்ச் சென்றுர்கள். துஷ்டகேது முணுமுணவென்று வைதுகொண்டே தன் ஆட்களை யழைத்துக் கொண்டு மாளிகையை நோக்கித் திரும்பிச் சென்றுன்.

வில்வநாதன் முதலியவர்கள் நகர ஓரம் சேர்ந்ததும் மாயசிங்கன் தன் குதிரையை நிறுத்த மற்றவர்களும் நிறுத்தினர்கள்.

மாயசிங்கன் வில்வநாதனை நோக்கி "வாலிபனே! இங்கிருந்து நாங்கள் பிரிந்துவிட வேண்டியதே. நீ வேண்டுமாயின் இக்குதிரையை நீயே கொண்டு போகலாம்'' என்றுன்.

வில்வநாதன் "தலைவரே! நீர் இப்போது செய்யும் பேருதவிக்கும் எனக்கு இதுகாறும் செய்திருக்கும் பல

நன்மைகளுக்கும் என்னுடைய நன்றியை எவ்வண்ணம் வெளியிடுவதென்பது எனக்குத் தெரியவில்லை. இக்குதிரையையளிக்கும் அன்பிற்காக மிக்க வந்தனமளிக்கிறேன். ஆனல் இச்சீமாட்டி நடந்தே தம் மாளிகைக்குச் செல்லக் கருதுவார்கள் என்று நினைக்கிறேன்'' என்று குசலாம்பாளைக் குறிப்பாய் நோக்கினன். அக்கன்னிகை யக்குறிப்பை யுணர்ந்துகொண்டு, "ஆம் ஆம். நான் நடந்தே என் வீடுபோய்ச்சேர விரும்புகிறேன். ஏனெனில் வீடு அருகிலேயே யிருக்கிறது'' என்றாள். அதன்மேல் மாய சிங்கனும் அவன் ஆட்களும் அங்கிருந்து திரும்பிவிட வில்வநாதனும் குசலாம்பாளும் பாதையில் நின்று விட்டார்கள்.

நடந்த சம்பவங்களால் கன்னிகைக்கு வில்வநாதன் பல நாட்கள் பழக்கமுடைய நண்பன்போல் ஆய்விட்டான். அவள் அவனை நோக்கி நீர் எனக்குச்செய்த உதவிகளுக்காகப் போதுமானபடி என் நன்றியையும் வந்தனங்களையும் வெளியிடத்தக்க சக்தி எனக்கில்லை. என் தாய்தந்தையரே உமக்குப்போதுமானபடி வந்தனமளிக்க வேண்டும். ஆகையால் நீர் என் வீடு வரையில் எனக்குத்துணையாய் வந்து இரவு நான் வராததால் எவ்வளவோ வியாகூலப்பட்டுக்கொண் டிருக்கும் என் பெற்றோரிடம் என்னை யொப்பித்துவிட்டு அவர்கள் வந்தனத்தைப்பெற்றுக்கொண்டு வரும்படிகோருகிறேன்'' என்றாள்.

வில்வநாதன் அவளுடைய வீடு எங்கிருக்கிறதென்று கேட்கவாயெடுத்தான். அச்சமயம் சற்று தூரத்திலிருந்து ஒருவிதப் பயங்கரமான கூச்சல் இருவர் செவிகளிலும் கேட்டதும் இருவரும் திடுக்கிட்டு நின்றார்கள். குசலாம்பாள் நடுங்கிப்போய் அவன் புயத்தைப்பற்றிக்

கொண்டாள். முதலில் அச்சத்தம் ஓர் கூட்டமான மிரு கங்களின் சத்தம் போல் கேட்டது. சற்றுநேரத்திற்குள் அது ஜனங்களுடைய அசுபாவமான கோஷ்டமென்று அறிந்து மிக்க பயத்தோடு பிரமிப்படைந்து எங்காவது ஓடி யொளிக்க நாற்புறங்களிலும் நோக்கினார்கள்.

அச்சமயம் பாதையோரத்தில் ஒரு கோயில் மூடப் பட்டிருப்பதைக்கண்டார்கள். உடனே அங்கு சென்று வில்வநாதன் கதவைத் தட்டினான். கதவு பூட்டப்பட் டிருந்ததால் அவன் எவ்வளவு முயற்சி செய்தும் அதைத் திறக்கமுடியவில்லை. அந்த ஜனக்கூட்டத்தில் ஆண்பெண் சிறுவர் பெரியோர் அனைவரும் இருந்தார்கள். எங்கா வது இரண்டாயிரம் ஜனங்களுக்கதிகமே யிருந்தார்கள். அவர்களனைவரும் வெறிகொண்டு தொண்டைகிழியும்படி நாய்கள் போலும், ஓநாய்கள்போலும், கோவேறு கழு தைகளைப்போலவும் சத்தமிட்டுக்கொண்டும், ஒருவரை யொருவர் பீறிக்கொண்டும் கடித்துக்கொண்டும் அடித் துக்கொண்டும் சண்டையிட்டுக்கொண்டும் பலவிதவிகார மாய்க் குதித்துக்கொண்டும் பேய் வயப்பட்டவர்கள் போல் கூவிக்கொண்டும் வந்தார்கள். நேயர்களே! இவர் களே டாக்டர் தங்கவேலுப்பிள்ளை கூறிய ஏமக்கூத்து என்ற பயங்கரமான கொள்ளைநோய் கொண்டவர்கள்.

அந்தக் கொடிய வியாதியால் பீடிக்கப்பட்ட அப்பரி தாபமான ஜனங்களில் முன் அணியில் வருவோர் ஒரு வாலிபனும் கன்னிகையும் கோயிலின் கதவைத் திறக்க முயன்றுகொண்டிருப்பதைக் கண்டதும் புத்தி சபலத் தால் அவர்களும் தங்களைச் சேர்ந்தவர்களே யென்று கருதி அக்கதவை யுடைக்க நாம் சென்று அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவர்களை நோக்கிச் சென் றார்கள்.

முன்னிருப்பவர்கள் திரும்பியதே மற்றபேரும் அதே நாட்டத்தை யுடையவர்களாய் அங்கேயே திரும்பி விட்டார்கள். இதைக்கண்டதே குசலாம்பாள் வீறிட்டல றினள். வில்வநாதன் அவளுக்குத் தைரியம்கூறி அவ ளைக் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டான். வெறிகொண்ட அச்சனங்கள் வெள்ளம்போல் வந்து அக்கோயிலின் வாயிற்படிமேல் வீழ்ந்து கைக்கு அகப்பட்டவைகளை யெடுத்துக் கதவை யுடைக்கத் தொடங்கினர்கள்.

வில்வநாதன் எவ்வளவு பத்திரமாய்க் குசலாம்பா ளைக் காப்பாற்றமுயன்றும் முடியவில்லை. சற்று நேரத் திற்குள் ஜனங்கள் மேல் விழுந்ததைச் சகிக்கமுடியாமல் இருவரும் பிரிந்துவிட வேண்டியதாயிற்று. வில்வநாதன் குசலாம்பாள் பிரிந்துவிட்டதே மிக்க வியாகூலமடைந்து நாற்புறங்களிலும் தன்னல் கூடியவரையிலும் தேடிப் பார்த்தும் அக்கன்னிகை யெக்கதியானதும் புலப்படவே யில்லை. அந்தோ! அவனுக்குண்டான வியாகூலத்திற் கோர் அளவே யில்லை. "அந்தோ! இந்தப் பேய்களுக்குப் பறிகொடுக்கவோ அந்த அழகிய கன்னிகையை நமது உயிருக்குத் துணிந்து காப்பாற்றினேம். கடவுளே! உன் கருணை யிப்படியும் இருக்குமோ" என்று கடவுளைச் சிந் தித்துக்கொண்டே தன் உடைகள் கிழிபட்டுப் போவதை யும் சட்டை செய்யாமல் அவளைப் பன்முறை அப்பேய்க் கூட்டங்களில் நுழைந்து தேடிப்பார்த்தான். இதற்கிடை யில் அவர்கள் கோயிலின் கதவை யுடைத்து உள்ளே நுழைந்து அங்கிருந்த விலையுயர்ந்த பொருள்களை யெல் லாம் சின்னபின்னமாய் உடைத்து மிதித்துத் துவைத்து விட்டுக் கடைசியில் அக்கோயிலைச் சேர்ந்த மயான பூமிக் குள் நுழைந்தார்கள்.

அச்சமயம் அங்கு மயானபூமிக்கு வரும் வாயிற்படி

வழியாய் இரண்டு சவங்கள் அடக்கம் செய்யப்படக் கொண்டுவரப்பட்டன. அவற்றைக் கொண்டுவந்த ஜனங்கள் அவைகளை யங்கு வைத்துவிட்டுக் குழி தோண்டிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேய்கள் போன்ற இச் சனக்கூட்டத்தைக் கண்டதும் சங்கதி யறிந்துகொண்டதால் வீறிட்டலறிக்கொண்டு மயானபூமியை விட்டோடி விட்டார்கள்.

பேய் கொண்டவர்கள் போன்ற அச் சனங்கள் உடனே அச்சவங்கள்மேல் வீழ்ந்து அவற்றைத் துண்டுத் துண்டாய்ப் பிய்க்கத் தொடங்கினர்கள். இக்கோரக் காட்சிகளைக் கண்டதே வில்வநாதன் அங்கிருக்க மனம் பிடிக்காமல், அங்கிருந்து வெளிப்பட்டுக் குசலாம்பாளைப் பற்றி மிக்க துயரத்தோடேயே தன் வீட்டை நோக்கிச் சென்ருன்.

21-வது அத்தியாயம்.

அரண்மனையில் கலக்கம்—பயங்கரமான சதியாலோசனை-மாயசிங்கன் கூட்டத்தாருக்கு ஆபத்து—வில்வநாதனும் பூபாலனும் சந்தித்தல்—பூபாலன் மனதிலிருந்த பயங்கரமான துயரம் — வில்வநாதனது உதாரகுணம்.

முன் அத்தியாயத்தில் கண்டசம்பவங்கள் நடந்த அதே தினம் மாலைப்போது அரண்மனையில் பத்மநாயகியின் அறையில், இராணி, இராகவன், புண்ணியகோடிப்பிரபு, சித்திராங்கி ஆகிய இவர்களும் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் உட்கார்ந்துகொண் டிருக்கிருர்கள். டாக்டர் அப்போதுதான் வந்தார். வந்த

தும் அவர்களை நோக்கி "ஆ! நீங்களனைவரும் மிக்க திகில் பிடித்து முகவாட்டமடைந்திருப்பதன் காரணத்தை யறிந்து கொண்டேன். ஆம் நான் கூறிய அப் பயங்கரமான கொள்ளை நோய் நான் எதிர் பார்த்ததிலும் முன்னடியே வந்து விட்டது. இன்று ஊரில் சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் அந்நோயால் தாக்கப்பட்டு மிக்க கோரமான சம்பவங்களெல்லாம் நடந்தன. ஆனல் இப்போதுதான் நீங்களனைவரும் மிக்க சந்தோஷத் தோடும் உற்சாகத்தோடும் காலத்தைக் கழிக்கவேண்டும். உயர்ந்த ஒயின் சாராயத்தைத் தாராளமா யருந்தி மனதிற்குச் சோர்வுண்டாகா வண்ணம் பாதுகாக்கவேண்டும்" என்று யாவர்க்கும் தேறுதல் கூறிக்கொண்டிருந்தார். இவர் இவ்வாறு கூறிக்கொண் டிருக்கும்போதே வீதியில் சற்று தூரத்தில் பயங்கரமான ஓர் கூச்சல் கிளம்பியது. அச்சத்தம் வர வர அரண்மனையினருகில் வந்து விட்டது. அது நமது வில்வநாதனும் குசலாம்பாளும் கண்ட அதே கோரமான ஜனக்கூட்டத்தின் சத்தமே. அவர்கள் அருகில் வந்ததே அறையிலிருந்த அனைவரும் ஏககாலத்தில் ஒரே மனதாய்த் தட்டென்றெழுந்துபோய் வீதியின் பக்கத்திலிருக்கும் சாளரங்களைத் திறந்து பார்த்தார்கள். அந்தோ! அக்கோரக்காட்சியைக் கண்டதும், அக்கூட்டம் ஜனங்களின் கூட்டமோ பேய்களின் கூட்டமோ, இது கனவோ உண்மையோ என்று ஒன்றும் அறியக்கூடாதவர்களாய், சற்று நேரம் பிரமித்து விட்டார்கள்.

இராணி கோவென்றலறி முகத்தை மூடிக்கொண்டாள். ஆயினும் மறுபடி எதிரிலிருக்கும் காட்சியை உற்று நோக்கினள். இதற்கிடையில் சித்திராங்கி இமை கொட்டாமல் அக்கோரக்கூத்தையே நோக்கிக்கொண்

டிருந்தாள். புண்ணியகோடிப்பிரபு அவளேயே பார்த்துக்கொண்டிருந்தார். போகப்போக அவள் கண்கள் அகன்று பயங்கரமான பார்வை யடைந்தன. அவள் முகம் விகாரமடைந்தது. அவள் தேகம் நடுங்கியது. இதைக்கண்ட புண்ணியகோடிப்பிரபு மிக்க திகிலடைந்து அவளருகிற் சென்று அவளே எட்ட வரும்படி யழைத்தார். அவர் என்ன கஷ்டப்பட்டுப் பார்த்தும் அவள் கவனிக்கவேயில்லே. அந்தவிடத்திலிருந்து அப்புறம் இழுத்தார். அவள் மிக்க பலத்தோடு திமிறிக்கொண்டு போய் மறுபடி அதே யிடத்தில் நின்று கொண்டாள். புண்ணியகோடிப்பிரபு சகிக்க முடியாத பீதியடைந்தார். சற்று நேரத்திற்குள் அவள் தேகம் மெதுவாய் அசையத்தொடங்கியது. வரவர அந்த அசைவு அதிகமாகத்தொடங்கியது. அப்பிரபு அதற்கு மேலும் சும்மாவிருக்கமுடியாமல் பாய்ந்து போய் அவள் இடுப்பைப் பற்றி அங்கிருந்து தூக்கிவந்து விட முயன்றார். ஆனல் சித்ராங்கி உடனே விகாரமும் பயங்கரமுமான ஒரு கூச்சலிட்டதும் உடனே தும்பி சுத்துவதுபோல் சுற்றிச்சுற்றி ஆடத்தொடங்கிவிட்டாள். பார்வையால் அவ்வியாதி அவளேப் பற்றிக்கொண்டது.

இக்கோரக்காட்சியைக் கண்டதே இராணி வீறிட்டலறி அங்கிருந்த சோபாவில் சாய்ந்துவிட்டாள். புண்ணியகோடிப் பிரபுவும் மிக்க பீதியடைந்து, மகாகஷ்டத்தோடு பொறுத்துக்கொண் டிருந்தார். டாக்டர் மட்டும் பூரணதைரியத்தோடு இராகவனே விளித்து "நீ உடனே சென்று அரண்மனே வாத்தியக்காரரை அழைத்துச்சீக்கிரம் நடனசங்கீதம் வாசிக்கச்சொல்" என்று கூறினர். இரண்டொருநிமிடங்களில் அவ்வாறே அறைக்கு வெளியில் சங்கீதத்தின் சத்தம் கிளம்பியது. இரண்டொரு நிமி

டங்களில் சித்திராங்கியின் அகோரமான நடனமும் இரு தயத்துடிப்பும் கோரமுகமும் மாறுதலடையத்தொடங் கின. அவள் நடனம் சாந்தமும் இனிமையுமாகிய அச் சங்கீதத்திற்குத் தக்கவண்ணம் அமையத்தொடங்கியது. பத்துநிமிடங்களுக்குள் அவள் கோர நடனம் முழுதும் மாறியது. நெஞ்சுத்துடிப்பும் அடங்கிவிட்டது. பிறகு சங் கீத சுரம் ஓயஓய அவள் நடனமும் மெதுவாய் ஒய்ந்து கடைசியில் அவள் தரையில் மூர்ச்சையாய் விழுந்து விட் டாள். டாக்டர் உடனே அவளுக்கு ஔஷதமளித்து அவளை யவளுடைய படுக்கையறைக்குத் தூக்கிச் செல் லும்படி கட்டளை யிட்டுவிட்டு இன்னும் இரண்டு மூன்று மணி நேரத்தில் அவள் பூரணசுகமடைவாள் என்று கூறினர்.

சித்திராங்கி உடனே யவள் சயன அறைக்குக் கொண்டு போகப்பட்டாள். புண்ணியகோடிப்பிரபுவும் கூடவே சென்று அவள் படுக்கைக்கருகில் உட்கார்ந்து அவளைக் கவனித்துக்கொண்டே யிருந்தார். டாக்டர் இராணிக்கும் தைரியமுண்டாகத்தக்க ஒரு ஔடதம் அளித்து சயன அறைக்குச்சென்று நிம்மதியா யிருப்பது நலம் என்று கூறினர். அவ்வாறே இராணியை இராக வன் அவளறைக்கு அழைத்துச் சென்றான்.

இப்போது டாக்டரும் பத்மநாயகியுமட்டுமே அறை யில் இருக்கிறார்கள். இருவரும் தங்கள் முக்கியமான சதி யாலோசனைகளைப்பற்றி இரகசியமாய்ப் பேசத்தொடங் கினர்கள். டாக்டர் பத்மநாயகியை நோக்கிப் பின் வரு மாறு கூறினர்.

“நான் இன்று காலை மறுபடி என் வேவு ஆளாகிய அச்சிறுவனைக் கண்டேன். அவன் இன்று நான் எதிர் பார்த்த வேளைக்கு முன்பாகவே வந்து விட்டான். மாய

சிங்கன் அவனை யேதோ வேலையாய் நகரத்திற்கனுப்பின தாய்த்தெரிகிறது. இப்போது போதுமான சங்கதி தெரிந்தது. இன்று மூன்றும் நாள் இரவு மாயசிங்கன் தன் கட்டிடத்தைச்சேர்ந்த மூவாயிரம் ஆட்களுக்கும் ஒருவிருந்து அளிக்கப்போகிறுன். அச்சமயம் அக்கூட்டத்தை யடியோடழித்துவிடச் சித்தமாயிருக்கிறேன். இதோ இதுதான் மாயசிங்கன் கூட்டம் இருக்கும் இடத்தின் படம். இதில் எல்லாவிவரங்களும் அடங்கியிருக்கின்றன" என்று கூறிக்கொண்டே ஒரு படத்தை அவள் முன் காட்டினுர்.

பத்மநாயகி:—"அப்படியாயின் ஆறுயிரம் ஏழாயிரம் வீரர்கள் வேண்டும். அதோடு இராஜாங்க சைனியத்தில்கூட மாயசிங்கன் ஆட்கள் இருக்கிறுர்கள் என்று கூறினீர்கள்." என்றுள்.

டாக்டர்:—"அப்படியல்ல. முதலாவது அக்கள்ளக்கூட்டத்தை யழிக்கத்துணிகரமான இருநூறு வீரர்கள் மட்டுமிருந்தால்போதும். அத்தீர்மானத்தோடே தான் நான் இப்படத்தை யெழுதிவரச் சொன்னேன். எலிகள் வளையில் அடைக்கப்பட்டு வெளிவர முடியாமல் மாள்வதுபோல் இக்கள்ளக்கூட்டம் முழுமையும் அடியோடழிந்துபோம். அவர்கள் நன்ருய்க்குடித்து வெறியேறி யிருக்கையில் குகையிலிருந்து வெளித்தாண்டமுடியாமல் அடைக்கப்பட்டிருக்கிறேமென் றறிந்ததும் தங்களுக்குள்ளேயே யொருவரை யொருவர் தாக்கி மடிவார்கள். எஞ்சிய பேர் மெதுவாய்ப் பட்டினியால் வருந்திப் பிராணுவஸ்தைப்பட்டு மடிவார்கள்" என்ருர்.

பத்மநாயகி மிக்க ஆனந்தமடைந்து "ஆம் ஆம், அத்துஷ்டர்களுக்குத் தகுதியான தண்டனையே" என்

ருள். டாக்டர் "இரண்டாவது, எனது வேவு ஆள் இங்கு சைனியத்தில் இருக்கும் மாயசிங்கனுடைய ஆட்கள் இன்னின்னர் என்று எழுதிக்கொண்டு வந்திருக்கிறுன். ஆகையால் சுலபமாகவே அவர்களை நீக்கி மற்ற ஆட்களில் தகுதியானவர்களைப் பொருக்கிக்கொள்ளலாம்" என்றார்.

பத்மநாயகி "துஷ்டகேது, குரு, அந்தப் பிரபுக்கள் இவர்களெல்லாம் கூட அவ்விருந்திற்கு வந்திருப்பார்களோ?" வென்று வினவினுள். டாக்டர் "அச்சங்கதியைப்பற்றி எனக்கு இன்னும் தெரியாது. ஆனல் அவர்கள் அக்கள்ளக்கூட்டத்தோடு விருந்துண்ணச் சம்மதிப்பார்களென்று நான் கருதவில்லை. எப்படியாயினும் நாளைக்கு அந்த உண்மையைப் பற்றிப் பூரணமாயறிந்துகொள்வேன்" என்றார். பத்மநாயகி "தடையின்றி உமது வேவு ஆள் மூலமாய்" என்றுள்.

டாக்டர்:—"அல்ல. அவன் எதைப்பற்றியும் மாயசிங்கனைக் கேள்விகேட்க முடியாது. அங்கு என்ன நடக்கிறதோவென்று பார்த்துக்கொண் டிருந்து தனக்குத் தெரிந்தவற்றை யென்னிடம் வந்து கூறலாம். கடிதம் ஏதாவது அவன் கையிற் சிக்கினல் அதிலுள்ள சங்கதியைத்தெரிந்து கொள்ளலாம். அவன் அங்கென்னமோ எதையும் அக்கரையாய்க் கவனிக்காதவன் போலவே தோன்றவேண்டும். மாயசிங்கனுக்கு எள்ளளவு சந்தேகமேனும் உண்டாகுமாறு நடந்து கொண்டால் தட்சணம் அவன் பிராணன் போய்விட்டமாதிரியேயாகும்.

ஏன் என் சாமார்த்தியத்தால் நான் கருதும்போது துஷ்டகேதுவின் மாளிகையிலுள்ள இரகசிய அறைகளுக்கருகில் கூடச் செல்லச் சக்தியுடையவனுக விருந்தாலோ.

ஆம். துஷ்டகேதுவின் அந்தரங்க வேலைக்காரனுடைய உளவால் அவன் தன் கூட்டாளிகளோடு இரகசிய ஆலோசனை செய்யும் அறையில் நடப்பவைகளைக்கூட நானறிவேன். அந்த மாளிகையில் சுவருக்குள்ளாகவே இரகசிய வழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அந்த ஆட்காரனுக்கும் எனக்கும் மட்டுமே தெரியும். துஷ்டகேதுவுக்குக்கூட அது தெரியாது. நாளை யிரவு அந்த அறையில் துஷ்டகேது, குரு, மற்றப்பிரபுக்கள், அனைவரும் கூட்டம்கூடி என்னவோ ஆலோசனை செய்யப் போகிறார்கள். அவர்களுடைய சம்பாஷணையில் ஒரு வார்த்தைகூட விடாமல் நான் அறிந்துகொள்வேன்" என்றார்.

பத்மநாயகி மிக்க சந்தோஷமடைந்து "ஆகா! தங்களுடைய தந்திர சாமார்த்தியங்கள் மிக்க புகழத்தக்கவைகளே. வேறு யாருக்குமே அத்தகைய சாமார்த்தியங்கள் கிடைக்கா. தாங்கள் கள்ளக்கூட்டத்தை யழிப்பதைப்பற்றிய சங்கதியை யென்னிடம் கூறினீர்கள். ஆனால் இந்த அமரநாதனுக்குத் தூண்டுதலாயிருக்கும் சண்டாளர்களாகிய துஷ்டகேது, நகரகுரு முதலியவர்களுக்கு என்ன தண்டனை?" என்றாள்.

டாக்டர்:—"துஷ்டகேதுவைப் பற்றியும் அக்குருவைப் பற்றியும் நமக்காக வேண்டியதென்ன? அந்தக்கள்ளக்கூட்டம் அழிந்து ஒழிந்தால், அதோடு இந்தப் பரம துரோகியாகிய அமரநாதனும் ஒழிந்து போனால் அவர்களைப்பற்றி யென்ன?" என்றான்.

பத்மநாயகி:—"அப்படியாயின் அமரநாதன் மடியவேண்டியது தானோ?" என்றாள்.

டாக்டர் கோபத்தோடு "என்? நீ அவன் மடியலாகாதென்கிறாயோ? அவன் மடியவேண்டும். அதி

லும் இந்தத் தொத்து வியாதி வந்திருக்கும் இச்சமயமே அதற்கு அனுகூலமான காலம்.'' என்ருர்.

பத்மநாயகி மிக்க கலவரமும் வியப்புமடைந்து "தாங்கள் கூறுவது எனக்குச் சற்றும் விளங்கவில்லை'' என்ருள். டாக்டர் "ஏன்! இப்போது அந்த வியாதி நமது நகரத்தில் வந்து விட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. நமது இராஜமாளிகையில் எப்போதும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருக்கும் சித்ராங்கிக்கே வந்தது. அப்படி யிருக்க எப்போதும் சிடு சிடுப்பும் விகாரமுமுடைய அந்த அமரநாதனுக்கு வந்ததென்ருல் யார் தான் அதைப்பற்றி ஐயுறுவார்கள். இந்த உளவு உனக்குத் தெரிய வில்லையா?'' என்று குறிப்பாய் அவளை நோக்கினர்.

பத்மநாயகி "ஆம் ஆம் தெரிகிறது'' என்ருள். டாக்டர் "அக்கள்ளர்கள் அழியும் அதே வேளையில் அமரநாதனும் இங்கு ஒழியவேண்டும். அந்தக்கலகக்காரர்களாகிய துஷ்டகேது, குரு, மற்றப்பிரபுக்கள், இவர்கள் கள்ளத்தனமாய்ப் பட்டங்கட்டிய இத்துரோகியும் இவர்களுக்குத் துணையாயிருக்கும் அக்கள்ளக்கூட்டமும் ஒழிந்தால் அந்தத் துஷ்டகேது, நகரகுரு இவர்களை நாம் தண்டிக்கவேண்டிய அவசியங்கூட இல்லை. நீமட்டும் ஒரு வேலைசெய்யவேண்டும், அதாவது நீ மெதுவாய் ஜனகாபாய் இராணி தன் அசேதகனை கணவனை யொழித்து விட வேண்டியது அவசியமென்பதை யவள் அறிந்து அதற்குச் சம்மதிக்கும்படி நீ செய்யவேண்டும்'' என்ருர்.

பத்மநாயகி:—"எனக்கு நீர் வைத்த வேலை மிக்க கஷ்டமானது. ஏனெனில் இராணி மிக்க உதாரமும் பெருந்தன்மையுமான குணமுடையவள். அவள் இத்

தகைய விஷயத்திற்கு உடன்படுவது மிக்க கஷ்டம்'' என்றாள்.

டாக்டர் சற்று கோபமடைந்து "என்ன? அவள் ஒப்புக்கொண்டே யாகவேண்டும். அவள் கட்டாயம் நாம் சொல்லுகிறபடி கேட்டே தீரவேண்டும். அவளுடைய இரகசியம் நம்மிடம் சிக்கிக்கொண்டிருப்பதால் நாம் எந்த நிமிடத்தில் வேண்டுமாயினும் அவளை யழித்து விடலாம். நாம் யாவும் யோசித்துத்தானே அவளைத் தந்திரமாய் நமது இராகவனுடைய காதலியாகும்படிச் செய்தோம். நீ தந்திரமாய் அவள் இதற்குச் சம்மதிக்கும்படிச் செய்யவேண்டும். இன்றேல் பயமுறுத்த அஞ்சவேண்டாம். நான் கூறுவது தெரிகிறதா? இப்போது நாம் துணிந்து நடக்காவிட்டால் நாம் இதுகாறும் பட்ட கஷ்டங்களெல்லாம் வியர்த்தமாய்விடும். சித்ராங்கி நாளைக்குச் சுகமடைந்துவிடுவாள். அவள் இந்த விஷயத்தில் உனக்கு நல்ல உதவி செய்வாள். என்ன சொல்கிறாய்?'' என்றார்.

பத்மநாயகி:—"தாங்கள் கூறும் விஷயத்தை நன்றாயறிந்துகொண்டேன். நான் எப்படியாவது இராணியிந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளும்படி செய்கிறேன்'' என்றாள்.

மறுநாள் மாலை வில்வநாதன் "குசலாம்பாள் தினம் சென்று துதிக்கும் கோயிலுக்குச் சென்றால், அவள் அங்கு வந்திருப்பாள். அதனால் அவள் நேற்று க்ஷேமமாய் வீடுபோய்ச் சேர்ந்திருப்பாளென்று அறிந்துகொள்ளலாம்.'' என்று கருதி அக்கோயிலுக்குச் சென்றான். நகரில் நடந்த கோரக்காட்சியில் எந்த வீதியிலும் ஜனங்கள் வாசமே யில்லை. கோயிலிலும் அங்குள்ள குருமார்மட்

டும் ஆண்டவனைப் பிரார்த்திக்கொண் டிருந்தார்களே யன்றி வேறு ஒரு பூதருமில்லை.

வில்வநாதன் அங்கிருந்து துயரத்தோடு புறப்பட்டு மெதுவாய்ப் பலவீதிகளின் வழியாய்ச் சென்று கடைசியில் சுமார் ஒன்பது மணிக்கு இராஜமாளிகை யிருக்கும் வீதியின் கோடியிலிருக்கும் நீர்க்குழாயை நோக்கிச் சென்றான். அவன் அந்த விடத்தை நெருங்கியதே அங்கு பூபாலன் முன்பே வந்து தன் வரவை யெதிர்பார்த்திருப்பதைக் கண்டான். பூபாலன் இவனைக்கண்டதும் "ஆ வாலிபரே! தாங்கள் வாக்களித்தபடி வந்து என்னைச் சந்தித்ததற்காக மிக்க வந்தனமளிக்கிறேன்" என்றான்.

வில்வநாதன்:—"அப்படியானால் நீ கூறப்போவது அவ்வளவு முக்கியமான விஷயமோ? எதுவாயினும் சரி. என்னிடம் களங்கமின்றிக் கூறு. அது அகௌரவமான விஷயமல்லாதவரையில், எப்படிப்பட்டதாயினும் நான் உனக்கு உதவிசெய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றான்.

பூபாலன்:—அய்யோ கடவுளே! நானும் அப்படியே கூறும் தீரமுடையவனா யிருந்தால்......

வில்வ:—உன் மனதில் ஏதோ வேதனை யிருந்துகொண்டிருக்கிறது என்று அறிகிறேன்......

பூபாலன்:—ஆம். ஆம். என் மனதிலுள்ளவற்றை யுன்னிடம் கொட்டிவிட்டால்தான் என் மனம் சற்றேனும் நிம்மதியடையும். நான் மாயசிங்கனிடந்தான் வேலை செய்கிறேனென்று நீ கருதிக்கொண்டிருக்கிறாய். ஆனால் நான் இன்னொருவனிடமும் அவன் அடிமையாய் வேலை செய்து வருகிறேன்.

வில்வ:—அவனைப்பற்றித்தான் நேற்று மிக்க உதாரகுண

முடையவனிடம் வேலையாளா யிருக்கிறேன் என்று நீ கூறியது?

பூபாலன்:—"அல்ல அல்ல. அப்படிக் கூறியது மாயசிங்கனையே. ஆனால் நான் கூறும் மற்ற ஆள் மாயசிங்கன் குணங்களுக்கு நேர்மாறான குணமுடையவன், வஞ்சகன், கபடன், அக்கிரமஸ்தன். அவன் எப்படியோ என்னை மாயஜாலத்தால் மயக்கிவிட்டான். அது எவ்விதமாகவென்று எனக்கே தெரியவில்லை. ஆனால் அவனிடமும் தொழில் செய்வதால், அந்தோ கடவுளே! மிக்க உதாரகுணமுடைய மாயசிங்கனுக்குக் கொடிய விரோதியாய் நடந்துகொள்கிறேன். அந்தோ என் தொழில் இன்னதென்று வாயால் நான் கூறமாட்டேன். நீயே யூகித்தறிந்து கொள்" என்றான்.

இதைக்கேட்ட வில்வநாதன் மிக்க வியப்பும் துயரமும், இரக்கமும் அடைந்து பூபாலனை நோக்கிச் சற்று வெறுப்போடு,

"சரி சரி, தெரிந்துகொண்டேன். நான் உன் தொழில் இன்னதென் றறிந்துகொண்டாலும் அதை வாயாற் கூறமாட்டேன்" என்று இரண்டடி பின்னிடைந்தான். பூபாலன் "அய்யோ! வெறுப்படைந்து என்னை விட்டுப் போய்விடாதே. நான் கூறுவதை முழுதும் கேள். எப்படியோ மயங்கிப்போய் அச்சண்டாளனுடைய மாயவலையிற் சிக்கிக்கொண்டேன். என்மேல் பூரண அன்பு வைத்திருக்கும் மாயசிங்கனுக்குத் துரோகம் செய்வது என் மனதில் உறுத்தவில்லையென்று நினைக்கிறாய். அந்தோ! அதுவே எனக்கு நரகவேதனையாயிருக்கிறது. நான் அந்தத் துஷ்டனுடைய வலையிலிருந்து தப்பமுடியவில்லை. என்ன செய்வேன். நீ யென்னை

யடி, உதை கொன்றுபோடு. ஆனல் இச்சமயத்தில் விட்டு விட்டுப்போய்விடாதே" என்றான்.

வில்வநாதன் இரக்கத்தோடு "அந்தோ பரிதாபம். நீ கூறுவதைக்கூறு" என்றான். பூபாலன் "ஓ கடவுளே! நீ என்மேல் இரக்கம் காட்டுகிறாய். நான் பரிதபிக்கத்தக்கவனே. ஆயினும் குற்றவாளியே. அய்யோ மிக்க இழிவான துரோகி......" என்றபோது, வில்வநாதன் "உன்னைச் சூது தந்திரங்களால் இத்தகைய இழிவான தொழிலைச் செய்யும்படி மயக்கிய துஷ்டன் யார்?" என்றான். பூபாலன் உடனே நடுக்கங்கொண்டு "அய்யோ கடவுளே! அதைத்தான் நான் இப்போது கூறக்கூடாது. என்னை மன்னிக்கவேண்டும். பிறகு அக்காரணம் விளங்கும். நீ மாயசிங்கனுக்கு உதவி செய்யக்கூடும், ஏன் அவனைக் காப்பாற்றக்கூடும் என்ற விஷயத்தை முன்னே கூறுகிறேன் அது உன்னால் கூடும்" என்றான்.

வில்வநாதன் "நான் அதைத் திருப்தியாய்ச் செய்வேனென்று நீ பூரணமாய் நம்பலாகும்" என்றான். பூபாலன் "உன்னிடம் பூரண நம்பிக்கையிருப்பதாலேயே என் உயிரையுன் வசம் ஒப்புவித்தேன். ஏனெனில் நான் இவ்வாறு துரோகம் செய்தேன் என்ற சங்கதி மாயசிங்கனுக்குமட்டும் கொஞ்சம் தெரிந்துவிட்டதோ அவன் எவ்வளவுதான் உதாரகுணமுடையவனாக விருந்தாலும் என் உயிர் போன மாதிரியே" என்றான்.

வில்வநாதன் "நான் நீ கூறினதாகக் கூறமாட்டேன் என்று சத்தியம் செய்யட்டுமா?" என்றான். பூபாலன் அந்தோ நீ உன் வாக்கால் கூறமாட்டேன் என்றால் அதுவே ஆயிரம் சத்தியங்கள் போலாகும்" என்றான். வில்வநாதன் ஒருபோதும் கூறமாட்டேன் என்றான்.

பூபாலன் "ஆ! நீ இப்படிக் கூறுவாயென்று

நானறிவேன். உன்போன்றே சத்தியநெறியில் நின்றும் நான் பிறழாதிருந்திருந்தால்...அதிருக்கட்டும்; சங்கதியைக் கூறிவிடுகிறேன்: இன்று கழித்த இரண்டாவது நாள் இரவு மாயசிங்கன் யாவர்க்கும் ஒரு பெரிய விருந்து நடத்தபோகிறான்; அன்று அவன் கூட்டத்தைச் சேர்ந்தவர்களனைவரும் அங்கு வந்து கூடுவார்கள். இச்சங்கதி இராணிக்கும் அவளைச்சேர்ந்தவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுமட்டுமல்ல; மாயசிங்கனும் மற்றக் கள்ளர் கூட்டமும் வசிக்கும் இரகசியமான விடத்தின் விவரங்களைக்காட்டும் படமே அவர்களிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இராணியின் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த அனுகூலமான சமயத்தில் மாயசிங்கனுக்குத் தீங்கு செய்யலாகும். ஏன், அன்று கள்ளர் கூட்டத்தையடியோடேயே அழித்து விடுவார்களென்பது நிச்சயம். நான் உனக்கு இன்னும் அதிகமாக ஒன்றும் கூறவேண்டியதில்லை.'' என்றான்.

வில்வநாதன் "சரி சரி. நான் செய்யவேண்டியது இன்னதென்று நன்றாயுணர்ந்துகொண்டேன். பெருந்தன்மையுடைய மாயசிங்கன் ஒருபோதும் அப்படி மடியலாகாது. ஓ பூபாலா! உன்னிடம் நல்லகுணம் இல்லாமற்போகவில்லை. நீ ஒரு துஷ்டனுடைய மாயவலையிற் சிக்கிப்பெரும் பாதகத்தைச்செய்துவிட்டாலும் அத்தனைபேர் அடியோடு மடிவதை நினைக்க உன்மனம் சகிக்கவில்லையென்பது, இச்சங்கதியை நீ என்னிடம் வெளியிட்டதால் நன்றாய்த் தெரிகிறது. உடனே இந்தக் கெட்டவழியிலிருந்து திரும்பிவிடு. நான் ஒருவரிடமிருந்தாலும், அதாவது பிரதம அரண்மனை வைத்தியர் வீட்டில் வசித்தாலும் ஒருவருடைய ஆதரணையிலிருப்பவனல்ல. என் வரையில் நிம்மதியாகவே பூரண சுயாதீனத்

தோடிருக்கிறேன். என்னைப்போல் சொந்தச் சகோதரன் போன்ற சிநேகன் உனக்குக்கிடைப்பது அருமை. நீ பேசாமல் என்கூட வந்து வசித்துக்கொண்டிரு. ஒரு குறையுமின்றி நிம்மதியா யிருக்கலாம்" என்றான்.

இந்த அன்பான வார்த்தைகளைக்கேட்ட பூபாலன் மனங்கசிந்து கண்ணீர் விட்டுக்கொண்டே "ஓ கருணை நிறைந்த உத்தமனே! உன் தெய்வத்தன்மை பொருந்திய செய்கைகளுக்கு ஆண்டவனே கைம்மாறளிக்க வேண்டும். நான் இத்தகைய அன்புடைய உத்தம நண்பன் வார்த்தைக்கு மறுத்துக் கூறுவது பெரும்பாதகமே யாகும். முன்னமே என்னை இப்பாபச்செயலில் புகுவித்த சண்டாளனுடைய பெயரைக்கூற மறுத்து விட்டேன். இப்போதும் உன்னிடம் வந்து வசிக்க எனக்கு எவ்வளவோ பிரியமாகவே யிருந்தும் நான் அப்படிச்செய்ய மறுக்கவேண்டியவனாகவே யிருக்கிறேன். நான் பெரிய சண்டாளன். நான் மறுத்த விஷயங்களைப் பற்றிய உண்மையும் காரணமும் பின்னால் உனக்கு எப்படியும் தெரிய வரும். அப்போது நான் இச்சமயம் மறுக்கவேண்டிய அவசியமிருந்ததென்று நீயே கூறுவாய் என்பது நிச்சயம். இப்போது இதற்கு மேல் கூறக்கூடிய நிலைமையில் நானில்லை. அந்தோ உன் அன்பிற்காக என் நன்றியை யெவ்வாறு காட்டுவதென்று எனக்கு விளங்கவில்லை. மாயசிங்கனை மறவாதே, வந்தனம் வந்தனம் நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு வில்வநாதன் பதில் கூறுகிறானா வென்பதைக்கூட கவனிக்காது, குதிரைமேலேறிக்கொண்டு துரிதமாய்ச் சென்றான்.

வில்வநாதன் பூபாலனைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே மெதுவாய் வீடுபோய்ச் சேர்ந்தான். இரவு முழுமையும் அவனுக்குச்சரியாய் நித்திரை பிடிக்கவேயில்லை. சுபாவத்

தில் நற்குணங்களை யுடைய பூபாலனை நல்லவழியில் எப்படியேனும் திருப்பி விடவேண்டும் என்ற யோசனை யொருபக்கம்; குசலாம்பாள் க்ஷேமமாய் வீடுபோய்ச் சேர்ந்திருப்பாளா என்ற கலக்கம் ஒரு பக்கம்; கடைசியில் சேர்ந்தே யிருப்பாளென்று நினைத்துக்கொண்டு நித்திரைபோய் விட்டான்.

22-வது அத்தியாயம்.

வில்வநாதன் மாயசிங்கனைச் சந்தித்தல்—பெரிய மடத்தின் பூர்வசரிதை—கள்ளக்கூட்டத்தை யழிக்க இராஜாங்கப்படைபுறப்படுதல்—இராகவன் அப்படையை நடத்தும் சாமார்த்தியம்—மாயசிங்கன் சாமார்த்தியம்—இராகவன் படையின் திண்டாட்டம்—மாயசிங்கன் எதிரிகளுக்குக்காட்டும் உதாரத்தனம்—இராகவன் சிறைப்படல்.

முன் அத்தியாயத்தினிறுதியில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த மறுநாள் காலே வில்வநாதன் வழக்கம்போல் உடுத்திக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டான். அவன் மனதில் பூபாலனைப் பற்றியும், குசலாம்பாளைப்பற்றியும், மாயசிங்கனைப்பற்றியும் சிந்தித்துக்கொண் டிருந்தாலும், அச்சமயம் மாயசிங்கனைப் பற்றியே அதிக சிந்தனையாயிருந்தது.

அவன் முன்னுள் பூபாலனைச் சந்தித்த விடத்திற்குச் சென்று அங்கிருந்து நேராய் நகரத்தின் ஓரம் சென்றுன். இடையில் துஷ்டகேதுவின் மாளிகையைக் கண்டபோது அவன் மனதிற் பல சிந்தனைகள் உதித்தன. சில நிமிடங்கள் அங்கு நிற்காமலிருக்க அவனுல் முடியவில்லை.

அதன் பிறகு அங்கிருந்து நகர ஓரத்தைக்கடந்து வெளியான விடத்தைச் சேர்ந்தான்.

முதலில் அவன் புறப்பட்டபோதே, "அடடா! நாம் எப்படி மாயசிங்கனுக்கு எச்சரிக்கை செய்வது? அவனுடைய வாசஸ்தலத்திற்குச் செல்லும் வழி எதுவென்று பூபாலனையாவது கேட்காமாற் போனேமே. நாம் கேட்டு அவன் கூறியிருந்தாலும், மாயசிங்கனே நமக்கு அந்த இரகசியத்தைக் கூறுதவரையில் நாம் அங்கு செல்வது நியாயமாகுமா?" என்று சிந்தித்துக் கடைசியில் "ஆ! இந்த ஊதுகுழல் இருக்கிறதே. இதன் உதவியால் மாயசிங்கனைச் சந்திக்கலாம் என்ற நினைப்பு வந்த பின்பே நகர ஓரத்தை நோக்கித் துரிதமாய்ச் சென்றான்.

அங்குள்ள வெளிப்பிரதேசத்தை யடைந்து சுமார் இரண்டு மூன்று மைல்கள் சென்றபின் ஒரு மரத்தடியில் நின்று மாயசிங்கனளித்த ஊதுகுழலை யெடுத்து ஊதினான். சுமார் பத்து நிமிடங்களுக்குள் கிருஷ்ணன், ஜக்கன், அச்சுதன் மூவரும் அவன் எதிரில் வந்து நின்றதும் தங்கள் குதிரைகளை நிறுத்திக் கீழே யிறங்கினர்கள். அச்சுதன் வில்வநாதனை நோக்கி "வாலிபரே! இன்று நாங்கள் உமக்கு என்ன காரியம் செய்யலாகும்?" என்றான்.

வில்வநாதன் "நண்பர்களே! நான் உங்கள் தலைவராகிய மாயசிங்கனை யுடனே அவசியமாய்க் காணவேண்டும். நான் காணவேண்டிய விஷயம் அவருக்கு மிக முக்கியமானது" என்றான்.

அச்சுதன்:—"அப்படியா! அப்படியாயின் அதோ கிழக்கில் தெரிகிறதே சிறு குன்று, அதன் உச்சியில் ஒரு கோயிலிருக்கிறது, ஒரு சுனையுமிருக்கிறது. அதைப்

பார்த்திருக்கிறீரோ?" என்றதே, வில்வநாதன் "ஆகா நான் பன்முறை அந்த விடத்திற்குச்சென் றிருக்கிறேன். பிரயாணிகள் அங்கு தங்கித் தாகத் தைத் தணித்துக்கொள்வதும் கோயிலில் பிரார்த் தனை செய்வதும் வழக்கம்." என்றான்.

அச்சுதன் "தாங்கள் அக்கோயிலருகிற்சென்றால். அதற்குள் எங்கள் தலைவர் அங்கு வந்திருப்பார், தாங்கள் நேராய் இக்கொல்லை மேட்டின் மேலேயே அம்பு விட் டதுபோற் சென்றால் சீக்கிரம் போய்ச்சேரலாம்" என் றான். வில்வநாதன் அவ்வாறே சென்று அக்குன்றை யணுகும்போது ஒருமனிதன் குதிரைமேலேறிக்கொண்டு அக்குன்றின் மறுபுறம் இருந்து அதிவேகமாய் வரு வதைக்கண்டான்.

வில்வநாதன் குன்றின் மேலேறி அங்கிருக்கும் கோயிலருகிற் சென்றபோது மாயசிங்கன் தன் குதி ரையை யொருமரத்தில் கட்டிவிட்டு அங்கு தனக்காக எதிர் பார்த்திருப்பதைக் கண்டான்.

மாயசிங்கன் இவனைக்கண்டதும் "என் அன்பார்ந்த வாலிபனே! உன்னைக்காண மிக்க சந்தோஷமடைகிறேன். உனக்கு ஒரு குதிரையை யளிக்காமல் உன்னை யிந்தக் கொல்லை வழியாய் நடக்கவைத்ததற்காக அந்த முட் டாள்களை நன்றாய்க் கண்டித்தேன்" என்றான்.

வில்வநாதன்:—"அந்தோ! எனக்கு அதனால் ஒரு கஷ்ட முமில்லை. நான் எப்போதும் நடந்தே இங்கெல் லாம் செல்வது வழக்கம். நான் வந்த காரியத்தை முதல் கூறவேண்டும். அக்காரியமாவது உனக்கு ஒரு எச்சரிக்கை செய்வதற்கே..." என்றதே,

மாயசிங்கன்:—"ஆ! அப்படியாயின் முன்னடியே நான்

அதற்காக உனக்கு மிக்க வந்தனம் செய்கிறேன்'' என்றான்.

வில்வநாதன்:—நீர் எனக்கு வந்தனம் அளிக்லாகாது. என் உயிரே உம்முடையது.

மாயசிங்கன்:—ஓ! நான் இருக்கு மட்டும் உனக்கொரு தீங்கு நேருவதைக் காணமாட்டேன். உன்னைச் சந்திக்கும் ஒவ்வொருமுறையும் உன்னிடம் புதுப் புது அருமையான குணங்களையே நான் காண் கிறேன். அதென்ன காரணமோ எனக்குத் தெரிய வில்லை. என் சொந்தப்புத்திரன்மேல் எனக்கு எவ் வித அன்பிருக்குமோ அவ்வாறு உன் மேலிருக் கிறது. இனியுன் எச்சரிக்கையைக் கூறலாம்.

வில்வநாதன்:—ஆனால் அது எப்படி எனக்குத் தெரிந்த தென்று என்னைக் கேட்காதிருக்கவேண்டும்.

மாயசிங்கன்:—தடையின்றி உனக்கு எது மட்டில் கூறப் பிரியமோ அவ்வளவே கூறு. அதற்கு மேல் நான் உன்னை யொருவார்த்தைகூட கேட்கமாட்டேன். நான் அவ்வாறு செய்வேனாகில் நீ செய்யும் உத விக்கு நான் நன்றி பாராட்டாதவனாவேன்.

வில்வநாதன்:—நீர் இரண்டு நாட்கள் கழித்து உமது வாசஸ்தலத்தில் ஒரு பெரிய விருந்து நடத்தப்போகி றீர். அப்போது உமது கூட்டத்தைச் சேர்ந்தவர்க ளெல்லாம் அங்கு வந்து கூடுவார்கள். அச்சமயத் தில் உமது எதிரிகள் உங்கள் கூட்டத்தை யழித்து விடக் கருதி யிருக்கிறார்கள்.

மாயசிங்கன்:—ஆ! இராணியின் துருப்புகள்?

வில்வநாதன்:— ஆம் என்றான்.

மாயசிங்கன்:—''உனக்கு மிக்க நன்றியோடு வந்தன மளிக்கிறேன். என் எதிரிகள் என் இரகசிய வாசஸ்

தலத்தை யறிந்துகொண் டிருக்கிறார்கள். ஆகையால் என் கூட்டத்தில் ஒரு வேவு ஆள் இருக்கிறான். இருக்கட்டும். அதைப்பற்றி பின்னால் பார்த்துக்கொள்வோம். இப்போது நீ வந்து கூறிய எச்சரிக்கையால் எனக்குப் பெரிய உபகாரம் செய்திருக்கிறாய். இனி எதிரிகள் வரட்டும். விருந்து நடந்த மறுநாட்காலை என் எதிரிகள் எப்படி அவமானத்தோடு நகரத்திற்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள் என்ற சங்கதி நகர முழுதும் பறை யறைந்தது போலாய்விடும்.'' என்றான்.

அதன் பிறகு வில்வநாதன் அங்கிருந்து நகரத்திற்குத் திரும்பினான்.

*   *   *   *

நயனபுரிக்கு ஏழுமைல் தூரத்தில் சிறு குன்றுகளினிடையில் பெரிய மடம் என்று ஒரு மடமிருந்தது. அம்மடத்தில் மிக்க நேர்த்தியான வேலைப்பாடுடைய ஒரு கோயில் இருந்தது. மடமும் பிரம்மாண்டமான மடம். இக்கதையில் கூறப்பட்ட சங்கதிகள் நடந்த சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் அம்மடத்தில் நாற்பது ஐம்பது குருமார்கள் வசித்துக்கொண்டிருந்தார்கள். அம்மடத்திற்கு ஏராளமான வருமானமும் இருந்தது. அதில் சேர்ந்திருந்த சந்நியாசிகளாகிய குருமார்களனைவரும் பெரும்பாலும் உயர்குடியிற்பிறந்தவர்கள். அவர்களும் இன்னும் அவர்கள் பரிவாரமும் சேர்ந்து சுமார் இருநூறு பேர் அங்கு வசித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வாறிருக்கும்போது ஒரு வாலிபகுரு செய்த ஒரு கொடிய பாபகிருத்தியத்தால் அங்கு இருவர் கோரமாகத் தற்கொலை புரிந்துகொண்டார்கள். அதுமுதல் அங்கிருந்த சந்நியாசிகளனைவரும் ஒருவரொருவராய் அங்கிருந்து வெளிக்

கிளம்பிவிடத்தொடங்க, கொஞ்சகாலத்திற்குள் அம்மடம் காலியாய்விட்டது. அதுமுதல் அங்கு ஒருவரும் வசிப்பதில்லை. நாளடைவில் அந்தப் பிரதேசத்தில் இறந்தவர்களுடைய ஆவேசங்கள் நடமாடுவதாகப் பலவித வதந்திகளுண்டாகியதால் ஒருவரும் அந்த எல்லைக்குள்ளாகவே செல்வதில்லை. இராஜாங்கப்போர்வீரர்களே அந்தப் பிரதேசத்தில் அடிவைக்க அஞ்சினர்களென்றால் நாம் இன்னும் அதிகமாய் அதைப்பற்றிக் கூறவேண்டுவதின்றும்.

அக்கட்டிடத்தில் பலபாகங்கள் இடிந்து கிலமாகிவிட்டன. நிலவறைகளிலும் மேல் பக்கம் பலவிடங்களிலும் செடிகள் முளைத்து அடர்ந்த காடுகள் போலாய்விட்டிருந்தன.

இவ்வாறிருக்கையில் நமது கதையில் முன் அத்தியாயத்தில் கூறிய சம்பவங்கள் நடக்க மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு நகர ஓரத்தில் அடிக்கடி பிரயாணிகள் சூறையிடப்பட்டு ஒரு கள்ளக்கூட்டம் நடமாடிக்கொண் டிருப்பதாகத் தெரியவந்ததால் இராணுவவீரர்கள் அக்கள்ளரைப் பிடிக்கவேண்டிய சிறு சிறு அணிகளாக அனுப்பப்பட்டார்கள். ஒரு நாள் ஐம்பது சிப்பாய்கள் ஐந்துபேர் கள்ளர்களைக் கண்டு பின்பற்றிச் சென்றார்கள். கள்ளர்களின் குதிரைகளும் அதிவேகமாய்ச்சென்றதால் வீரர்கள் அவர்களை நெடுந்தூரம் துரத்திச்செல்லவேண்டியதாயிற்று. கள்ளர்கடைசியில் மடம் இருக்கும் எல்லைக்குள் நுழைந்ததைக் கண்டதே போர்வீரர்கள் பேசாமற் றிரும்பிவிட்டார்கள்.

போர்வீரர்கள் திரும்பி விட்டதை யறியாத கள்ளர் பாழடைந்திருக்கும் மடத்தருகிற்சென்றபோது அடர்ந்த காடுபோன்ற இடங்களிருப்பதைக் கண்டு இங்கு மறைந்து கொண்டால் வீரர்கள் தேடிப்பார்த்து விட்டுப் போய்விடு

வார்களென்றெண்ணிக் குதிரைகளை ஆங்காங்குபுதர்களுக்குள் கட்டி விட்டுத் தாங்களும் பதுங்கிக்கொண்டார்கள். இவர்களில் ஒருவன் தற்செயலாய் ஒரு புதரில் மறைபட்டிருந்த சிறு குகைபோன்ற ஒரு இடத்தைக் கண்டு மற்றவர்களுக்குக்கூற, யாவரும் அதற்குள் நுழைந்தபோது அக்குகை உள்ளேயே நெடுந்தூரம் செல்வதைக் கண்டு அதைச்சோதிக்கத் தொடங்கினார்கள். கடைசியில் அங்குள்ள நிலவறைகள் பாழடைந்த மடம் கோயில் யாவற்றையும் கண்டார்கள்.

மாயசிங்கன் இந்த விடம் நாம் நம்கூட்டத்தாரோடு மறைவாய் வசிப்பதற்கு மிகத் தகுதியானது. இதை நல்ல அரணனஸ்தலமாகச் சுலபத்தில் செய்துவிடலாம்'' என்று தீர்மானித்துக்கொண்டான். அவ்வாறே சுரங்க வழி தங்களுக்குமட்டும் தெரியும்படியாகவும் வேறு யாரேனும் அங்கு வந்து பார்த்தாலும், இங்கு கட்டிடம் தற்செயலாய் உடைந்து விழுந்து கிடக்கிறதென்று நினைக்கும்படிக்கும், இங்கு ஏதோ வழி செல்கிறதென்ற சந்தேகமே சற்றும் உதிக்காத வண்ணமாகவும், அங்கு விழுந்து கிடந்த கட்டிடத்துண்டுகளைக்கொண்டு அவ்வழியைச் சரிப்படுத்திவிட்டான். இதன்றி மடத்தின் மறுபக்கம் ஒரு இடத்தில் படிக்கட்டுகளின் வழியாய் உள்ளே வரவும் வெளிச்செல்லவும் ஒரு மார்க்கமிருந்தது. அதையும் அப்படியே இரகசிய வழியாக்கிவிட்டு உள்ளே தங்களுக்கு வேண்டிய இடம் வரையில் சுத்திசெய்து, வீரர்களிருக்க அகன்ற கூடங்களும், குகைகளும், தனக்கு வேறு நன்றாய் அலங்கரிக்கப்பட்ட அறைகளும் குதிரை இலாயங்களும் யாவும் அமைக்கச் செய்தான். இரண்டு இரகசிய வழிகளும் இவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குமட்டுமே தெரியும். இதற்காகவே அன்னியர் யாரை

யேனும் அங்கு அழைத்து வருவதாயின், அவர்கள் எப்படிப்பட்டவர்களாயினும் சரி அவர்களை யுள்ளே யழைத்து வரும்போதும் வெளியில் கொண்டுபோய்விடும் போதும் அவர்கள் கண்களைக் கட்டிவிடுவதென்ற கண்டிப்பான விதியை யனுசரித்துவந்தார்கள். அவர்கள் அங்குவந்து சேர்ந்தபிறகே நாளுக்குநாள் அவர்கள் கூட்டம் பெருகி மூவாயிரம்பேருக் கதிகமாகிவிட்டது. அவர்களுடைய அரணில் எப்போதும் ஐம்பது அறுபதுபேர் இருந்து கொண்டே யிருப்பார்கள். மாயசிங்கன் ஏற்பாட்டின்படி மற்றபேர் மூன்றுபேர் நான்கு பேர்கள் சேர்ந்த சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து நகர ஹோட்டல்களிலும், இராஜபாட்டையிலுள்ள சத்திரங்களிலும் நகர ஓரங்களிலுள்ள நிம்மதியான கிராமங்களிலும் வசித்துக்கொண்டிருப்பார்கள். துரைத்தன சைனியத்திலும், அரண்மனைக்காவல் படையிலும், சிறைச்சாலைகளிலும் மந்திரிகள், பிரதானிகள், செல்வப் பிரபுக்கள் இவர்கள் மாளிகைகளிலும் மாயசிங்கன் ஆட்கள் இருப்பார்கள். சிலர் ஆங்காங்கு திரிந்துகொண் டிருப்பார்கள். நகரைச்சுற்றிலும் பனிரண்டு மைல் வட்டாரத்திற்குள் இவர்கள் இல்லாத இடமில்லை எனலாம். பின்னல் நடக்கப்போகும் விஷயங்கள் நன்குவிளங்கும் பொருட்டு மடசம்பந்தமான இவ்விஷயங்களைப்பற்றி நாம்கூறவேண்டியிருந்தது. இனிக் கதையைத் தொடர்ந்து செல்வோம்.

மேற் கூறப்பட்ட இரண்டு இரகசிய வழிகளும் பூபாலன் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையிட மளித்தபடத்தில் நன்கு விவரித்துக்காட்டப்பட் டிருக்கின்றன. அந்த வாலிபன் தன் அன்பார்ந்த எஜமானுக்குத் தான் செய்த துரோகத்திற்காக மிக்க மனஸ்தாபமடைந்து அவனுக்கு எச்சரிக்கை செய்யும்படி வில்வநாதனிடம் கூறிக்

கொண்டிருக்கும் அதே சமயத்தில், தங்கவேலுப்பிள்ளை யப்படத்தைப்பார்த்து முன்னமே கள்ளர் கூட்டத்தை யடியோடழித்து விட்டவன் போல் ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கிறன்.

மாயசிங்கன் விருந்தளிக்கும் நாள் வந்து விட்டது. அன்றிரவு அவன் கூட்டத்தைச்சேர்ந்த ஆட்களனை வரும் அரணன மடத்தில் கூட்டம் கூடியிருக்கிறர்கள். இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். அப்போது பூரண மாக ஆயுதங்களைத் தரித்த இருநூறு போர்வீரர்கள் நக ரத்திலிருந்து புறப்பட்டார்கள். இவர்களனைவரும் கள்ளக் கூட்டத்தை யழிப்பதற்காக பொருக்கி யெடுத்தனுப்பப் படும் போர் வீரர்கள். இவர்களுக்குத் தலைவனுய்ச் செல லத் தானகவே ஒப்புக்கொண்டவன் இராகவன். இவர் களனைவரும் குதிரைகள்மேல் புறப்பட்டார்கள். யாவ ரும் தைரியசாலிகளே யாயினும் கள்ளர் இருக்குமிடம் பாழடைந்த மடம் என்று அறிந்ததே அவர்கள் சுலபத் தில் அங்கு செல்லச் சம்மதிக்கவில்லை. ஆனல் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை யவர்களுக்குப் பெருந்தொகை பரி சாயளிப்பதாய் வாக்குத்தத்தம் செய்ததோடு கையில் அத்தொகையில் ஓர் பாகத்தை யளித்தபின்பே யவர்கள் சம்மதித்தார்கள்.

இவர்களனைவரும் சந்தடி செய்யாமல் நகரத்தைக் கடந்து மடம் இருக்கும் பிரதேசத்தின் ஓரத்திலுள்ள காட்டருகில் வந்ததும் அங்குநின்று குதிரைகளினின்றும் இறங்கிக் குதிரைகளை யங்கு கட்டிவிட்டு ஐந்தாறு பேர் களை யங்கே காவல் இருக்கச் செய்து மற்றபேர் யாவரும் இராகவனல் நடத்தப்பட்டுச் சற்றும் சந்தடியின்றி நடந் தார்கள். யாவரும் மடத்தை நெருங்கி இரகசியமான சுரங்கவழியண்டை சென்றதும் அங்கு நின்றர்கள்.

இராகவன் தன் ஆட்களை இரண்டு சம அணிகளாகப் பிரித்து ஒரு அணியை யங்கு நிறுத்தி அங்கு விழுந்து கிடந்த பிரம்மாண்டமான கட்டிடத்தின் துண்டுகளாலும் கற்களாலும் அச்சுரங்க வழியை யடைத்து விடும்படி கட்டளை யிட்டான். அதன்படியே யவர்கள் வேலை செய்யத் தொடங்கினார்கள். அந்த வீரர் தைரியத்தோடேயே வந்தும், காட்டில் குதிரைகளை விட்டுப் புறப்படும்போது சாராயங் குடித்திருந்தும், மடத்தினருகில் வந்ததே அந்த விடத்தைப்பற்றி யவர்கள் கேள்விப்பட்ட ஆவேசங்களைப்பற்றிய பயங்கரமான சங்கதிகளெல்லாம் அவர்கள் நினைவிற்கு வந்து அவர்களுக்குப் பீதியையும் திகிலையும் உண்டாக்கிவிட்டன. தங்களுக்கு ஏதோ ஒரு பெரிய ஆபத்து நேரிடப்போகிறது என்ற ஒருவித உணர்ச்சி அவர்கள் மனதில் உண்டாகிவிட்டது. ஆனால் அவர்கள் அதை வெளியில் கூறுவதற்கில்லை. உண்மையில் இராகவன் ஒருவன் தவிர மற்ற அனைவருக்குமே மனதில் திகிலுண்டாகிவிட்டது. ஆனால் ஒவ்வொருவனும் தனக்குத் தான் அப்படியிருக்கிறதென் றுணர்ந்து மற்றவர்கள் நிலைமையைப்பற்றிச் சந்தேக முடையவனாகவே யிருந்தான்.

இராகவன் இரண்டாவது அணியை யழைத்துக்கொண்டு மடத்தின் சுவர்களிலுள்ள பெரிய வெடிப்புகளின் வழியாய் நுழைந்து கடைசியில் படிக்கட்டுகளின் வழியாய்ச் செல்லும் இரகசிய வழியருகிற் போய்ச் சேர்ந்தான். உடனே கள்ளரை யடியோடழித்து ஜயமடைந்ததுபோலவே சந்தோஷ மடைந்தான். ஏனெனில் இரண்டு பக்க வழிகளையும் அடைத்துவிட்டால் அவர்கள் அன்னாகாரமின்றி மடிவார்களென்று டாக்டர் தங்கவேலுப்பிள்ளை செய்த ஏற்பாட்டின்படி ஒருவழியை முன்னமே யடைத்துக்கொண் டிருக்கிறார்கள். இப்போது

தான் இரண்டாவது வழியைக் கைப்பற்றிக்கொண்டான். இன்னும் சற்று நேரத்திற்குள் இவ்வழியும் அடைக்கப் பட்டுப்போம். ஆகையால் மிக்க சந்தோஷத்தோடு அங் கிருந்த கட்டிடத்துண்டுகளால் வழியை யடைக்கும்படி கட்டளை யிட்டான். உடனே வீரர்கள் ஒரு பெரிய கட் டிடத்துண்டைப் புரட்டி வாயிற்படியில் தள்ளினர்கள்.

அதேவினடி பக்கத்திலிருந்த கோயிலின் பின்புற மிருந்து நூற்றுக்கணக்கான கள்ளர்கள் இடதுகரத்தில் தீவட்டியையும் வலது கரத்தில் வாளையும் ஏந்திக்கொண்டு பாய்ந்து வந்தார்கள். அவர்களைக் கண்ட போர்வீரர் கள் பீதியும் நடுக்கமுமடைந்து நாற்புறங்களிலுமுள்ள சந்துகளிலும் நுழைந்து ஓடிவிடப் பார்த்தார்கள். ஆனல் இவர்கள் எப்பக்கம் சென்றாலும் அங்கெல்லாம் வாளேந் திய கள்ளர் பூமியிலிருந்து முளைத்ததுபோல் முளைக்கத் தொடங்கினர்கள். போர் வீரர்கள் நடுங்கிப்போய்ப் பெருங் குழப்பமடைந்து தடுமாற்றமுற்று விழித்தார்கள். அங்கு ஒரு கல்லின்மேல் மாயசிங்கன் நின்றுகொண்டிருந் தான். அவன் இருபுறங்களிலும் இரண்டு ஆட்கள் தீவட் டிகளைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். அவன் தன் எதி ரிகளை நோக்கி "போர்வீரர்களே உடனே யுங்கள் ஆயு தங்களைக் கீழே வைத்துவிடுங்கள். இன்றேல் இந்த விடமே யுங்கள் மயான பூமியாய்விடும்" என்றான்.

போர்வீரர்கள் அவன் கூறி வாய்மூடுமுன் தங்கள் ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டார்கள். இராகவன் அவர்களை யெவ்வளவோ பயப்படுத்தி நீங்கள் உயிர் நீங்கு மட்டும் வீரத்தோடு நின்று யுத்தம்புரிய வேண்டுமென்று கூறியும் அவர்கள் பயத்தால் அவன் வார்த்தையைக் கவனிக்கவேயில்லை. கடைசியில் அவன் "அடே கோழைப் பயல்களே! சற்றும் வீரத்தனமில்லாதவர்களே! நான்

உங்களைப்போல் நடந்துகொள்ளமாட்டேன்'' என்று கூறிக்கொண்டே தன் வாளை யோங்கிக்கொண்டு கள்ளர் கூட்டத்திற் புகுந்தான்.

இதைக் கண்டதே மாயசிங்கன் முகம் பளிச்சென்று வெளுத்து விட்டது. அவன் ஆத்திரத்தோடு துரிதமாகத் தன் ஆட்களை நோக்கி "பத்திரம்! அவனைக் கொல்ல வேண்டாம். அவன் தேகத்தில் எள்ளளவு காயம் கூடப் படாமல் அவன் ஆயுதத்தைப்பிடுங்கிக்கொண்டு அவனைக் கைது செய்யுங்கள் பத்திரம் பத்திரம்!'' என்றான். மறு நிமிடமே இராகவனுடைய வாள் அவன் கரத்திலிருந்து பிடுங்கப்பட்டதும் அவன் கைது செய்யப்பட்டுத் தலை நாணி நின்றான்.

அச்சமயம் அங்கிருந்த ஒரு சுவர்வெடிப்பின் வழி யாய் அச்சுதன் துரிதமாய் வந்து தன் தலைவன் எதிரில் நின்று வந்தனமளித்து, "கனம் பொருந்திய எமது தலைவரே! நமது எதிரிகள் அனைவரும் பிடிக்கப் பட்டார்கள்; யாவரும் சிறையாக்கப் பட்டார்கள். அந்தோ! ஒருவர் கூட எங்கள் முன்னின்று எதிர்க்க முடியாததால் மிகச் சுலபமாய்ச் சில நிமிடங்களில் அவர்களைப் பிடித்துக் கொண்டோம். சுரங்கவழியி லிருந்தோர் மட்டுமல்ல- குதிரைகளையும் அவற்றிற்குக் காவலாயிருந்த அனைவரையும் பிடித்துக்கொண்டோம். ஒருவரேனும் தப்பவில்லை.'' என்று கூறினன்.

இவற்றைக் கேட்ட மாயசிங்கன் சந்தோஷத்தால் முகம் சிவப்பேறிச் சந்தோஷ மடைந்து "அப்படியாயின் இரத்தம் சிந்தவில்லையே?'' என்றான். அச்சுதன் "தலைவரே! இரண்டொரு தசைக்காயங்கள் மட்டும் நேர்ந்திருக்கலாகும். ஆனல் ஒரு மரணம் கூடச் சம்பவிக்க வில்லை'' என்றான்.

இவையாவும்கேட்ட இராகவன் இச்சங்கதிகள் நமது ஆட்களைப் பற்றியே என்று அறிந்துகொண்டான். தன் ஆட்களில் ஒருவன்கூடக் கத்தியை யோங்கித் தாக்காமல் கோழைகள் போல் சரணடைந்து விட்டார்கள் என்பதை யறிய அவன் மனம்துடித்தது. அவனுக்கு மிக்க அவமானமாகத் தோற்றியது. என் செய்வான் பாவம். பற்களை நெறநெற வென்று கடித்துக்கொண்டு தன் கோபத்தை யடக்கிக்கொண்டு பேசாமல் நின்றான்.

மாயசிங்கன் அச்சுதனை நோக்கி, "அந்தக்கோழைப் பயல்கள் எல்லாருடைய ஆயுதங்களையும் பறித்துக்கொண்டாயா?" என்றான். அச்சுதன் "தலைவரே! அவர்களிடம் ஒருபேனுக்கத்திகூடக் கிடையாது" என்றான். மாயசிங்கன் "சரி அவர்கள் நெற்றியில் 'அவமானம்' என்றெழுதி அவர்களை யெல்லாம் கொண்டு போய் நகரத்திற்குள் விட்டுவிடு" என்றான். அச்சுதன் "எஜமானே தங்கள் கட்டளைப்படியே" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அதன் பிறகு மாயசிங்கன் கிருஷ்ணனை நோக்கி "நீ அவசியமான நம் ஆட்களைத் துணைகூட்டிக் கொண்டு அதேமாதிரி இப்போது எதிரிலிருக்கும் போர் வீரர்களை யெல்லாம் நடத்திக்கொண்டு போய் நகரத்தில் விட்டுவா" என்றான்.

கிருஷ்ணன் "தலைவரே! இதோ அவ்வாறே செல்கின்றேன்" என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

அதன்மேல் மாயசிங்கன் இராகவனை நோக்கி "இராகவா! நீ என் கூடவா!" என்று கூறியதும் அங்கிருந்து புறப்பட்டு உள்ளே யிருக்கும் தன் அறையை நோக்கிச் சென்றான். இராகவன் எவ்வளவோ கோபமிருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாமல் யாவற்றையும் அடக்கிக் கொண்டு தலைகுனிந்தபடி மாயசிங்கன் பின்னால் சென்றான். மூன்று ஆயுதபாணிகளான கள்ள வீரர்கள் அவன் பின்னாற் றொடர்ந்து சென்றார்கள்.

23-வது அத்தியாயம்.

இராகவனுக்கும் மாயசிங்கனுக்கும் நடக்கும் அதிசய சம்பாஷணை—பத்மநாயகி இராணிக்குச்செய்யும் படபோதக போதனை—பெருஞ் சதியாலோசனையின் முடிவான தீர்மானம்.

மாயசிங்கனும் இராகவனும் மாயசிங்கனுடைய அலங்காரமான அறைக்குள் நுழைந்ததே பின்னால் வந்த ஆட்கள் வெளியில் நின்று விட்டார்கள். அறைக்குள் இருந்த பூபாலன் தன் மனதிலிருந்த குழப்பங்களை யெல்லாம் அடக்கிக்கொண்டு சாந்தமாகவே நின்றிருந்தான். மாயசிங்கன் அவனை நோக்கி நீ செல்லலாம் என்றதே அவன் கதவை மூடிக்கொண்டு சென்றான்.

இராகவன் ஒரு ஆசனத்தில் அமர்ந்து அவமானத்தால் இன்னது பேசுவதென்று உணராதவனாய்ப் பேசாமலிருந்தான். மாயசிங்கனும் என்ன காரணத்தாலோ ஒரு விதமான கலவரமடைந்து சற்றுநேரம் மௌனமாகவிருந்தான். கடைசியில் அவனே இராகவனை நோக்கி,

"நீ யுன் நிலைமையை மிக்க அலட்சியமாய்க் கருதுவதாகத் தெரிகிறது" என்றான். இராகவன் "சுத்த வீரன் எதற்கும் பயப்படமாட்டான். என் கூடவந்த ஆட்கள் என் வீரத்தன்மையில் கால்பாகம் உடையவர்களா யிருந்தால் நீ இவ்வளவு சுலபமாகச் செயமடைய முடியாது" என்றான். மாயசிங்கன் "அப்படி யிருந்தாலும் உன் ஆட்கள் எம்மாத்திரம்?" என்றான். இராகவன் "அப்படியல்ல; வீரத்தோடு யுத்தம் புரிந்தால் ஜெயமடையா விட்டாலும் கையில் பிடித்தவாளோடு யுத்த

மூலையில் மடிந்திருக்கலாம். அப்போது எங்கள் பெயருக்கு அகௌரவம் நேரிடாது'' என்றான்.

மாயசிங்கன் உற்சாகத்தோடு "பேஷ், உன்னில் வீரத்தன்மையிருக்கிறது'' என்றான்.

இராகவன்:—"என்னுடைய வாளை யென்னிடம்கொடு. உன்னோடு வாட்போர் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றான்.

இதைக்கேட்ட மாயசிங்கன் முகம் சட்டென்று வெளுத்துவிட்டது. என்ன காரணத்தாலோ அவன் அதைக்கேட்டதும் மனம் பதைத்து,

"சே! பேசாமலிரு முட்டாள். நீ என்ன பேசுகிறாயென்றே யுனக்குத் தெரியவில்லை'' என்று கூறினான்.

மாயசிங்கன் மொழிகளைக்கேட்ட இராகவன் ஒருவித அச்சமடைந்து "உன் பிரியம் எப்படியோ அப்படிச் செய். ஆயினும் இழிகுலத்தில் பிறந்த கள்ளனாகிய நீ என் போன்ற வீரன் வாளினால் மாள்வதை மிக்க கௌரவமாகவே கருதவேண்டும்'' என்றான்.

மாயசிங்கன் சற்று கோபமடைந்தவனாகி "வீண் பிதற்றல் பிதற்றும் விளையாட்டுப் பயலே, நான் வேணுமென்றால் உனக்கு ஒரு வார்த்தையால் புத்திகற்பித்துவிடுவேன், நீ யார் தெரியுமா? இலட்சுமணன் என்ற செம்படவனுடைய மகன்றானே என்பதை நினைத்துக்கொள்'' என்றான்.

இராகவன்:—"ஆ! உன்னை இப்படியே கையாற் குத்திவிடலாமென்று ஆவலாயிருக்கிறது. ஆயினும் ஒரு கள்ளனோடு மல்யுத்தம் செய்வது!'' என்றான்.

மாயசிங்கன்.—"ஆம் கள்ளன்றான். ஆயினும் இப்போது நீ கள்ளனுக்கு நன்றி காட்டவேண்டியவனான நிலை

மையி லிருப்பது உன் மனதிற்குப் புலப்படவில்லை போலும்" என்றான்.

இராகவன்: — "சட் - என்னத்திற்கு உனக்கு நன்றி பாராட்ட வேண்டும்?" என்றான்.

மாயசிங்கன்:—'என்னத்திற்கா? ஏன், உன் அறிவிற்குப் புலப்படவில்லையோ? கூறுகிறேன் கேள். உன் ஆட்களனைவரையும் துஷ்டப் பூச்சிகளை நசுக்கிக்கொல்வதைப்போல் அடியோடு சங்கரித்துவிடாமலும், நீயும் உன்னைச்சேர்ந்த இரக்கமற்றவர்களும் என்னையும் என் கூட்டத்தாரையும் பட்டினியால் வருந்திக் கோரமரண மடையும்படி வீரத்தன்மையில்லாத கோழைத்தனமான ஏற்பாடு செய்தீர்களே, அவ்வாறு உன் ஆட்களைச் சிறைவைத்து அன்னாகாரமின்றி மடியச்செய்யாமலும், சிறைபிடித்து வைத்துக்கொண்டு உங்கள் உயிர்களுக்கெல்லாம் தக்க மீட்சிப்பணமாவது வாங்காமலும் அவர்களையெல்லாம் உயிரோடுவிட்டுவிடுவதற்காக. இதுமட்டுமல்ல. உனக்கு எவ்விதத்தீங்கும் செய்யாமல் உன் தாயின் முகத்தில் போய் நீ விழிக்கும்படி உன்னை உயிரோடு விட்டுவிடுவதற்காகவும் நீ நன்றியுடையவனாக இருக்கவேண்டியதா இல்லையா?" என்றான்,

இவற்றைக்கேட்ட இராகவன் பதில் கூறமுடியாமல் விழித்தான். அவன் மனதில் ஒருவிதக் குழப்பம் உண்டாய்விட்டது. மாயசிங்கன் முன் துணிகரமாய் எதிர்த்துப்பேச அவனுக்கு அச்சமுண்டாய் விட்டது. கடைசியில் மாயசிங்கனை நோக்கி,

"நீ இவ்வளவு உதாரகுணமுடையவனாக விருப்பது மிக்க அதிசயமே. அப்படி என்னைக்கொல்வதாயினும்

சுத்தவீரனை நடத்தவேண்டிய முறைமைபோல் சிரச்சேதம் செய்வதா யிருக்கட்டும்'' என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட மாயசிங்கன் தேகம் துடித்து, "முட்டாள்! என்ன உளறுகிறாய். உன் கொலையா நான் ஏற்றுக்கொள்வது. நான் உனக்கு எவ்விதத் தீங்கும் செய்ய உடன்பட மாட்டேன் என்பதை நன்றாயறிந்திரு. ஆனால் உன் நன்மைக்காகவே உன்னோடு வாதிக்க வேண்டியவனாகவிருக்கிறேன். நான் கூறுவதைத் தூஷணையாகக்கருதிக் கோபமாய்ப் பேசாதே, ஆனால் பொதுவாகச் சிந்தித்து அதற்குத் தக்க நியாய மிருப்பின் கூறு. நீ யொரு வீரன்தான். பிரபுப் பட்டம்பெற்றிருக்கிறாய் என்பதும் உண்மையே. உன் நிலைமையை யொரு கௌரவமான பதவியாகக் கருதி யிருக்கிறாய். ஆனால் நீ என்ன? உண்மையில் நீ டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் அடிமை. நீ இராணியின் அக்கிரமமான காதலால் ஆளப்படுகிறாய். உன் தாயாருடைய நாமதேயம் நகர முழுதும் யாவராலும் மிக்க அகௌரவமாகவே நினைக்கப்படுகிறது. உன் தாயார் அந்த டாக்டர் தங்கவேலுப் பிள்ளையோடு சேர்ந்து கொண்டு சதியாலோசனைகள் செய்வதும், இராணியை யடக்கி வசியப்படுத்திக்கொண்டு பல அக்கிரமங்களைச் செய்வதும், அயோக்கியத் தன்மையாய் நடந்து கொண்டிருப்பதும் எங்கும் மானக்கேடாய்த் தூற்றப்படுகிறது. நீயும் அவர்களோடு சேர்ந்துகொண் டிருப்பதால் அவர்கள் துர்நடக்கைகளுக்கெல்லாம் உடந்தையாகவே யிருக்கிறாய் என்று தெரிகிறது. நீ இராணியின் அக்கிரமக் காதலுக்குட்பட்டிருப்பதால் அவள் கணவன் உன்கொடிய விரோதியாய்விட்டான். நீ அவன் மேல் பொறாமை கொண்டு அவனை வெறுக்கிறாய். ஆனால் நியாயப்படி இராணியின் காதலுக்கு அவனல்லவோ உரியவன்." என்றான்.

இராகவன் "எங்களுடைய நடவடிக்கைகளைப்பற்றி நியாயம் பேச உனக்கு யார் அதிகார மளித்தார்கள்?" என்றான்.

மாயசிங்கன் நிமிர்ந்து உட்கார்ந்து வாலிபனை யுற்று நோக்கி ஒருவித அதிகாரத் தோரணையோடு "என்ன? யார் கொடுத்ததா? எனக்கா? ஏன் அந்த அதிகாரத்தை யானே வகித்துக்கொண்டேன்..." என்றதே இராகவனுக்கு அவன் விஷயத்தில் ஒருவித அச்சம் தோன்றிவிட்டது. அவனை யறியாமலே ஏதோ ஒரு பெரிய சக்தி "நீ அவனை யெதிர்த்துப் பேசும் அதிகாரமாவது யோக்கியதையாவது உடையவனல்ல" என்று அவன் மனதை யடக்கிவிட்டதுபோ லிருந்தது. ஆகையால் அவன் தன்னிலும் அந்தஸ்திலும் மேலான ஒருவன் முன் இருப்பவன் போல் ஒருவிதப் பிரமிப்போடு பேசாமலிருந்தான்.

மாயசிங்கன் அவனைநோக்கி "வாலிபனே! சற்று நேரத்திற்கு முன் நான் ஒரு வீரன் என்று உன்னை நீ பெருமையாகக் கூறிக்கொண்டாய். உன்னிடம் வீரத் தன்மை யிருக்கிறது உண்மையே. ஆனால் சுத்தவீரனுக் குரிய குணங்கள் தைரியமும் ஆயுதங்களை யுபயோகிக்கும் பயிற்சியுமட்டுமேயல்ல. இன்னும் சில உயர்குணங்க ளிருக்கவேண்டும். அவன் தன் குடும்பத்தின் கௌரவத் தைக் காப்பாற்றவேண்டும். தன் தாயின் நல்ல பெயரும் தன் தந்தையின் கௌரவமும் அழியாதபடி பாதுகாக்க வேண்டும். இவைகள் ஒரு சுத்தவீரனுடைய கௌரவத் திற்கு அவசியம் வேண்டியவைகள். இக்கடமைகளை நீ நிறைவேற்றி யிருக்கிறாயா என்பதைச் சிந்தித்துப்பார். உன் தாயாருடைய பெயரின்மேல் ஜனங்களுக்கு அவமதிப் பும் வெறுப்பும் இல்லாமலிருக்கிறதா? அதிருக்கட்

டும்; உன் தந்தையின் மேலிருக்கும் இழிவான அவ மானச்சொல்லை யொழிக்க நீ என்ன முயற்சி யெடுத்துக் கொண்டாய்?'' என்றான்.

இராகவன் "நீ என் தாயாரைப்பற்றிக் கூறிய விஷயங் களில் என்னமோ நியாயம் இருக்கலாகும். ஆனால் என் தந்தையைப்பற்றிய விஷயத்திற்கு என் மேல் குற்றஞ் சாட்ட என்னகாரணமிருக்கிறது? நான் சிறுவனாகவிருந்த போதே அவர் போய்விட்டார். எங்கு சென்றாரென்று யாருக்கும்தெரியாது. அவர் இறந்து போயே யிருப் பார் என்று நாங்கள் கருதிக்கொண்டிருக்கிறோம்'' என் றான்.

மாயசிங்கன்:—"இருக்கட்டும். அப்படியாயினும் இறந்து போன மனிதன்மேல் மிக்க அநீதமும் அபாண்டமு மான குற்றச்சாட்டு ஏன் இருந்துகொண் டிருக்க வேண்டும்? கொலை செய்யப்பட்ட டாக்டர் தேவ ராஜுப்பிள்ளையை இலட்சுமணன் என்ற உன் தந்தையே கொன்றதாக இப்போது உன் தாய் நம்புகிறாளாவென்று கடவுளின் முன் சத்தியமாகக் கூறும்படி உன் தாயாரைக் கேள். அதைப்பற்றிய எல்லா விஷயங்களையும் நன்றாய் ஆராய்ச்சிசெய்து இறந்து போன தேவராஜுப்பிள்ளை செல்வவந்தனா என்று விசாரித்தறி. அதன்பிறகு இப்போது அந்த ஆஸ்தியை யார் அனுபவிக்கிற தென்று தெரிந்து கொள். அதன்மேல் நீயே பாரபட்சமின்றிச் சிந்தித் துப்பார்.'' என்றான்.

இராகவன் "நீ கூறுவதைப் பார்த்தால் இவ்விஷயங் களில் உனக்கேதோ அக்கரை யிருப்பதுபோல் காண்கி றது. ஒருசமயம் என்தந்தை யுனக்கு அறிமுகமோ சிநே கமோ?'' என்றான்.

மாயசிங்கன் "இறந்துபோன ஒருவன் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று நீதியைக்கூற, அம்மனிதன் நாமறிந்தவனாக விருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. சுபாவமாகவே உன்னிடம் நற்குணமும், வீரத்தன்மையு மிருக்கின்றன. ஆனால் உன் தாயாரின் கெட்ட நடக்கைகளின் மணமும் அரண்மனையிலுள்ள இராணியின் கூட்டத்தி லிருக்கும் அயோக்கியருடைய சகவாசமும் உனது உயர்வான குணங்களை மங்கச்செய்து விட்டிருக்கின்றன.

நான் இன்னும் அதிகமா யுனக்குக் கூறவேண்டியதில்லை. ஏனெனில் இதுகாறும் நான் கூறிய இரண்டொரு முக்கிய விஷயங்கள் உன் மனதில் ஆழ்ந்து வேரூன்றியிருக்கத் தவறிவிட்டால், இன்னும் பல நாழிகைகள் உனக்கு பிரசங்கம் செய்தாலும் ஒருபயனு முண்டாகாது. நான் கூறிய விஷயங்களை நன்றாய் நிதானமாகச் சிந்தித்துப்பார். உன் கடமைகளை நீ நிறைவேற்றி விட்டால் பிறகு மாயசிங்கனை யெப்போதும் பூரண நன்றியோடேயே நினைப்பாய்.

எது எப்படியாயினும் ஓ இராகவா! மாயசிங்கன் உன் விரோதியல்ல வென்பதையும் எப்போதும் உன் க்ஷேமத்தையே கோருகிறவ னென்பதையும் மட்டும் மறவாதே. எப்போதேனும் உனக்கு ஆபத்தான சமயம் நேர்ந்தால், சீக்கிரத்திலேயே நேரப்போகிறது - அப்போது உடனே கள்ளத் தலைவனான மாயசிங்கன் உதவியைக்கோரச் சற்றும் பின்னிடையாதே. இனி நீ போய் வரலாம்" என்றான்.

இராகவன்:—"ஆ! எவ்வளவு உதாரமும் பெருந்தன்மையு முடையவனாக விருக்கிறாயோ அவ்வளவு ஆச்சரியமானவனாகவு மிருக்கிறாய்" என்றான்.

மாயசிங்கன்—"என்னைப்பற்றி இன்னும் நன்றாய் அறிந்து கொள்ளும் காலம் அதிக தூரத்திலில்லை. இனி நீ புறப்படு. நான் கூறிய விஷயங்களைப்பற்றி நன்றாய்ச் சிந்தனை செய்" என்று கூறியதும்,

வெளியில் காத்துக்கொண்டிருந்த தன் ஆட்களை விளித்து "நீங்கள் இந்த வாலிபரை யழைத்துக்கொண்டு போய் நகரத்தில் பத்திரமாய் விட்டுவாருங்கள். இவருடைய கத்தியையும் குதிரையையும் அளித்துவிடுங்கள்" என்றான்.

இராகவனுக்கு மாயசிங்கன் விஷயத்தில் மனதில் ஒருவித அன்பும், அச்சமும் உண்டாய்விட்டன. அதன் காரணம் அவனுக்கே புலப்படவில்லை. அவன் மனப்பூர்வமாகவே தன் க்ஷேமத்தைக் கருதியே இவ்வளவும் நமக்குக் கூறினானென்று அவன் புத்தியிற்பட்டது. அவன் மிக்க ஆவலோடு தன் நன்றியை வெளியிடவுன்னிப் பார்த்தபோது மாயசிங்கன் அறையைவிட்டுப்போய் விட்டான் என்றறிந்தான்.

மாயசிங்கனுடைய ஆட்கள் தங்கள் தலைவன் கட்டளைப்படிக்கே இராகவனை யழைத்துக்கொண்டு போய் நகரத்தில் விட்டுத் திரும்பினார்கள். இராகவன் அரண்மனையை நெருங்கும்போது இரவு சுமார் இரண்டரை மணியிருக்கும். அதற்குள் அரண்மனையில் ஒரு பெருங் கோரமான சம்பவம் நேர்ந்து விட்டிருக்கிறது.

* * * * *

அதே இரவு சுமார் எழுமணிக்கு அதாவது இராகவன் தன் போர் வீரர்களோடு கள்ளரை யழிக்க நகரத்திலிருந்து புறப்படுவதற்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்துக்கொண் டிருக்கும்போது. அரண்மனையிலிருக்கும் பத்மநாயகி தன் அறையிலிருந்து புறப்பட்டு இராணி

யின் அறையை நோக்கிச் சென்றாள். அச் சமயம் இராணி தன் தோழியாகிய இரத்னங்கியைக்கூட அனுப்பி விட்டு அறையில் தனியாக விருக்கிறாள்.

பத்மநாயகியைக் கண்டதே இராணி "ஆ எனக்கு மனது நிம்மதியாயில்லாததால் தனியாக விருக்கவே பிரியப்பட்டு ஒருவரும் இங்கிருக்கவேண்டாமென்றனுப்பி விட்டேன்" என்றாள்.

பத்மநாயகி:—"தாங்கள் இப்படி வியாகூலமாயிருப்பதை யறிந்தே நான் இங்கு வந்தேன்" என்றாள்.

இராணி:—"அப்படியாயின் என்னருகிலுட்கார். என் வியாகூலத்தைப்பற்றிப் பேசலாம். முதலாவது உன் புத்திரன் கள்ளரை..." என்றதே,

பத்மநாயகி:—ஆ! இராகவன் கள்ளரைக் கருவறுக்கச் செல்கிறவன் க்ஷேமமாய்த் திரும்பிவருவானோவென்று உமக்கு மிக்க கலவரமாயிருக்கிறது.

இராணி:—ஆம் ஆம்.

பத்ம:—அவன் க்ஷேமத்தோடும் ஜெயத்தோடும் வருவான், அக்கள்ளர் இருக்குமிடத்தின் இரகசிய வழிகள் படத்தில் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஒரு கஷ்டமுமின்றி அந்த இரண்டு வழிகளையும் அடைத்துவிடலாம். அதோடு கள்ளர் கூண்டோடழிந்துபோவார்கள். அதைப்பற்றித் தாங்கள் கொஞ்சமும் கலவரப்படவேண்டாம். ஆனால் தங்கள் மனதில் இக்கலவரம் மட்டுமேயிருந்தால் நான் மனக்கலக்கமடையமாட்டேன்.

இராணி:—ஆ! இன்னொன்று அப்பயங்கரமான விஷயம். நேற்று நீ கூறியது. அதை நினைத்தாலும் என் மனம் நடுங்குகிறது.

பத்ம:—ஆ! தாங்கள் அப்படிக் கருதலாகாது. தங்களு

டைய க்ஷேமத்தைக் கருதியே தங்கள் நண்பர்கள் தங்கள் கொடிய விரோதி - தங்கள் கணவனுயினும் அவனை யொழித்துவிடக் கருதி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்குத் தகுதியான சமயம் இப்போது தான். காலந்தவறின் காரியம் கைகூடாது.

இராணி:—அவன் விரோதியாய் எனக்குத் துரோகம் செய்வதாயினும் இத்தகைய கொலைக்கு என்மனம் உடன்படவில்லை. அவன் ஒரு புழுப்போல், இருக்கிறான். அவனுக்காக இவ்வளவு பிரமாதமான வேலை செய்வது அனுவசியமே.

பத்ம:—மகாராணி! தாங்கள் இவ்வளவு அலட்சியமாய் அவனைக் கருதலாகாது. கம்பீரமான சிங்கம் ஒரு சமயம் தன் விரோதியைக் கண்டும் பேசாமல்போய் விடும்; சிறு தேளோ கொட்டும்; இப்போது தாங்கள் அவனை வெறுக்கிறீர்கள்; அவன் பேருக்குமட்டும் தங்களுக்குக் கணவனே யன்றி வேறில்லை. அவனைக் கண்டாலும் தங்களுக்கு வெறுப்பே. இன்னும் அவனைப்பற்றிய ஒருவிசேஷம் மட்டும் தங்களுக்குத் தெரிந்தால் ... அது நேற்றுதான் எனக்குத் தெரிந்தது. ஒருநாள் அமரநாதம் இராஜகுமாரன் அவமரியாதையாய் என் அறையில் நுழைந்து தங்களை யவமரியாதையாய்ப் பேசியபோது பிரதம டாக்டர் அவன் செவியில் ஏதோகூறியதே அவன் அடங்கி யொடுங்கி விட்டானல்லவா.

இராணி:—ஆம் ஆம். அது எனக்கு நினைவிருக்கிறது. அதென்ன இரகசியம்?

பத்ம:—“அது அவனுடைய இரகசியம் மகாராணியே! அது அவனுடைய மகா அக்கிரம நடக்கையைவெளியிடுவதோடு, அவன் காதலால் தங்களை மணம்புரிய

வில்லை யென்றும், தங்களுக்குப் பெரிய துரோகம் செய்வதாயினும் தனக்கு உயர்பதவி கிடைத்தால், போதுமென்று அதற்கு ஆசைப்பட்டே தங்களை மணம்புரிந்தானென்றும் வெளிப்படையாய்த் தெரிவிக்கிறது. அந்தப் பயங்கர இரகசியம் பகிரங்கமாய் விட்டால் தனக்கு மிக்க அவமானம் நேர்வதோடு தங்களுக்குக் கணவனாகவிருக்கும் பதவியை யிழந்து விடுவான். அதற்குப் பயந்தே அச்சமயம் பேசாமற் போய்விட்டான். அதென்னவெனில்? மகாராணியே தங்களுக்கு இப்போதும் துரோகம்செய்து தங்கள் பட்டத்தை யபகரிக்கக் கருதும் இவன் புருஷத்தன மில்லாத நபும்ஸகன்.'' என்றாள்.

இவற்றைக் கேட்டதே இராணி மிக்க கோபமடைந்தாள். இதையறிந்த பத்மநாயகி இதுதான் சமயமென்று, "மகாராணி! இவனைத் தாங்கள் அலட்சியமாய்க் கருதலாகாது. இப்போது தானே அரசனென்று இரகசியமாய்ப் பட்டங்கட்டிக்கொண் டிருக்கிறான். இவனுக்குத் துணையா யிருப்பவர்கள் மிக்க பலசாலிகள். இவன் அவர்கள் கையாயுதமா யிருக்கிறான். குருவினிட மிருந்து வரும் சைனியம் வந்ததே எதிரிகள் இவனை யரசனைகப் பகிரங்கமாய் விளம்பரப்படுத்தி விடுவார்கள். தாங்கள் ஜயமடைவது நிச்சயமென அவர்களுக்குப் பூரண நம்பிக்கையிருக்கிறது. ஆகையால் அமரநாதன் சிம்மாதனத்தில் உட்காரும் தினம் அதற்கு அறிகுறியாக அன்றே தங்கள் விரோதிகளில் முக்கியமானவர்களைச் சிரச்சேதம் செய்யத் தீர்மானித்து அவர்கள் பெயர்களைக் குறித்து வைத்திருக்கிறார்கள். ஆனல் அச்சங்கதி தங்களுக்கு மிக்க ஆத்திரத்தையும் மனத்துடிப்பையு முண்டாக்குமாதலால் அதை யிப்போது கூறத்தகாது. ஆனல் தங்கள் க்ஷேமத்

திற்காக இவளை யுடனே ஒழித்து விடுவதே தங்களுக்கு நல்லதென்பதே நான் கூறுவது" என்றாள்.

இராணி "ஆயினும் பரவாயில்லை. இவ்வளவு துணிகரமாய் வேலைசெய்யும் இத்துரோகிகளின் எண்ணங்களை நான் கட்டாயம் அறியவேண்டும்." என்றாள்.

பத்மநாயகி தான் ஏதோ அதைக் கூறப் பிரியமில்லாதவள் போலும் இராணியின் கட்டளைக்குப் பயந்து கூறுகிறவள் போலும் அபிநயித்துக் கொண்டு "மகாராணி! தங்கள் கட்டளைக்கு மறுத்துக்கூற யாரால்முடியும். தங்கள் எதிரிகளின் எண்ணமாவது, ஏன் அவர்கள் செய்திருக்கும் கட்டாயமான தீர்மான மாவது, தங்கள் கணவன் சிம்மாதனத்தில் அமரும் அதே வேளையில் அச்சந்தோஷ ஜயத்தைக் கொண்டாடும் அறிகுறியாக முதலாவது தங்கள் காதலுக்கடிமையாகிய என் குமாரன், இரண்டாவது டாக்டர் தங்வேலுப்பிள்ளை, மூன்றாவது நான், நான்காவது சித்ராங்கி, ஐந்தாவது புண்ணியகோடிப் பிரபு, இந்த ஐவர்மேலும் தங்கள் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளவேண்டு மென்பதே" என்றாள்.

இராணி:—ஆ! சண்டாளர்கள். என் அன்பிற்குரிய முக்கியமானவர்களைச் சிறைவைக்கவா—...

பத்மநாயகி:—"இல்லை யில்லை. அமரநாதன் அரசனாகும் அதே நிமிடம் நாங்கள் ஐவரும் சிரச்சேதம் செய்து விடப்படுவோம்" என்றாள்.

இப்பெரும் பொய்யைக் கேட்டதே இது உண்மையென்று நம்பிய இராணியின் மனம் துடிதுடித்து விட்டது. அவள் தேகம் நடுங்கிக் கண்கள் சிவப்பேறி, உதடுகள் துடித்தன. அவள் முகத்தில் கோபத்தனல் ஜொலித்தது. அவள் பத்மநாயகியைநோக்கி "ஆ! பரமசண்டாளன். என்வரையில் அத்துரோகி யிதுகாறும் செய்த

கொடிய சதிகளை யெல்லாம் பொறுத்துக் கொள்வேன். ஆனால் அடடா! என் அருமையான நண்பர்களை யெல்லாம் அடியோடு என்னைவிட்டுப் பிரித்துவிடக் கருதிய இச்சகிக்கொணாக் கொடுமையை...... அச் சண்டாளன் கட்டாயம் ஒழிய வேண்டியதே. நீங்கள் செய்யும் ஏற்பாட்டிற்கு நான் பூரணமாய் ஒப்புக்கொள்கிறேன். நீ சென்று செய்யவேண்டிய ஏற்பாடுகளைச்செய்'' என்றாள்.

பத்மநாயகி:—"ஆ இப்போது எங்கள் அரசி சுத்தவீரனுக் கொப்பாகிய அரசசிங்கமே யென்று ஆனந்தமடைகிறேன். இனிப் போய்வருகிறேன்'' என்று எழுந்து இரண்டடி நடந்தாள்.

இராணி:—"இரு இரு. ஒரு வார்த்தை. அந்த விஷயம் அவனுடைய அறையில் நடைபெறலாகாது. அவனுடைய வேலைக்காரர்க ளங்கு இருக்கிறார்கள். சந்தேகத்திற் கிடமுண்டாகும். சமாதான விருந்து நான் வைக்கப் போவதாகவும், அதற்கு டாக்டர், நீ, சித்ராங்கி, புண்ணிய கோடிப்பிரபு இவர்கள் மட்டுமே யழைக்கப்பட் டிருப்பதாகவும் ஒரு சீட்டனுப்புகிறேன். அவன் கட்டாயம் வருவான். அவ்விருந்து நமது அறையிலேயே நடைபெற வேண்டும். இவ்வளவே. நீ போய்வரலாம்'' என்றாள்.

24-வது அத்தியாயம்.

இராணி தன் கணவனுக்குக் கடிதம் எழுதல்-இராணியின் விருந்துமண்டபத்தில் அமரநாதன்—வஞ்சக சம்பாஷணை பட்டுச் சரிகைக்கயிறு-சமாதான விருந்து—மகாதந்திர மான படுகோலை—அமரநாத இராஜகுமாரன் மரணத்தைப் பற்றிய வதந்திகள்.

அமரநாதன் என்ற இராஜகுமாரன் தன்மனைவியாகிய இராணியினிட மிருந்து வந்த சீட்டைக்கண்டதே மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்தான். அவர்களிருவருக்கும் பரஸ்பர அன்பும் ஒற்றுமையும் கிடையாதென்று யாவர்க்கும் தெரியும். அரண்மனையின் வெவ்வேறு பாகங்களிலேயே அவர்கள் தனித்தனி வசிப்பது. அக்கடிதம் சற்று அன்போடு எழுதப்பட் டிருந்தால் ஏதோ சூதென்றே அவன் ஐயப்பட்டிருப்பான் -அப்படியில்லை. அக்கடிதம் எழுதப்பட்டிருந்த விதத்தை நோக்கினால் வெளிக்குப் பார்ப்பவர்கள் ஏதோ இவர்கள் சமாதானமாய் விட்டார்கள் என்று கருதிக்கொள்ளட்டும் என்றகருத்தோடு எழுதியதாகவே தோன்றியது. ஆகையால் அவனுக்கு ஐயம் தோன்றவில்லை. மேலும் இக்கடிதத்தால் தான் இரகசியத்தில் நடத்தும் சதியாலோசனை இராணிக்கும் அவளைச் சேர்ந்தவர்களுக்கும் கொஞ்சமும் தெரியவில்லை யென்று விளங்கியதால் அவன் சந்தோஷமடைந்தான்.

சுமார் ஒன்பதரை மணிக்கு அமரநாதன் மிக்க அழகான விலையுயர்ந்த உடைகளை யணிந்து கொண்டு இராணியின் அறைக்குச் சென்றான். அதற்கு முன்பே டாக்டர் தங்கவேலுப் பிள்ளை, பத்மநாயகி, சித்ராங்கி, புண்ய

கோடிப்பிரபு ஆகிய இவர்கள் அங்கு ஆயத்தமாய் வந்திருந்தார்கள். இராணி யச்சமயம் பல நிறங்களையுடைய பட்டு நூல்களில் இடையிடையே பளபளப்பான பொற்சரிகை யிழைகளைக் கலந்து அவற்றைச் சுமார் அரையங்குல கனமுள்ள ஒரு கயிருகத் திரித்துக்கொண் டிருந்தவள் அமரநாதன் வருகையைக் கண்டதும் அதைத் தன் பக்கத்தில் மறைவில் வைத்துவிட்டு அவனுக்கு நல்வரவு கூறினுள்.

அமரநாதன் "மகாராணிக்கு மிக்க வந்தனமளிக்கிறேன். இது முதல் நடந்துபோன அதிருப்தியான விஷயங்களெல்லாம் நம்மால் மறக்கப்படும் என்று நம்புகிறேன்" என்ருன். இராணி "இங்கிருக்கும் என் நண்பர்கள் விஷயத்திலும் அப்படியே நடக்குமென்று நம்புகிறேன்." என்ருள். இச்சமயம் இராணிக்கு எல்லாவிஷயத்திலும் திருப்தி யுண்டாகும்படி நடந்துகொண்டால் நமது விஷயத்தில் இவர்களுக்குச் சற்றும் சந்தேகம் உதிக்காமலே யிருக்கும், அப்போது நமது காரியம் சுலபமாய்க் கைகூடிவிடும் என்பது அமரநாதன் ஆலோசனை. ஆகையால் அங்குள்ளவர்கள் அனைவரையும்நோக்கினுன். அவர்க ளனைவர் முகங்களிலும் சந்தோஷமான குறியே யிருக்கக் கண்டதால், சரி இவர்களனைவரும் நமது இரகசிய மறியாதவர்களே யென்று தனக்குள் சிந்தித்துக் கொண்டு ஒவ்வொருவரிடமும் சிற்சில வார்த்தைகள் அனேக பாவமாகவே பேசத்தொடங்கினுன். முதலில், சித்திராங்கியை நோக்கி "ஆ! எப்போதும் மனச்சோர்வென்பதையே அறியாத கேளிக்கையாகிய கன்னிகையே! நீ வியாதியுற்றிருந்தா யென்பதைக் கேட்டபோது நான் உண்மையாகவே மனவருத்த மடைந்தேன்" என்ருன். அதற்குச் சித்திராங்கி அந்த வியாதி மகாராஜாவின் அனு

தாபத்தை நான் பெறுவதற்குக் காரணமா யிருந்தவரை யில் அது என்னைப் பற்றியதற்காக மிக்க சந்தோஷமே யடைகிறேன்'' என்றாள்.

அமரநாதன், "ஆ! உன் வார்த்தைகள் எப்படிப் பட்டவர்களுக்கும் பரமானந்தத்தை யளிக்கும். நீ யிப்போதிருக்கும் உற்சாகமும் உல்லாசமுமான காட்சி யைக் காண்போர் இவ்வளவு சமீபகாலத்தில் நீ அத் தகைய பயங்கரமான வியாதிக்குள்பட் டிருந்தாயென்று நினைக்கவே மாட்டார்கள்'' என்றான். சித்ராங்கி "அந்த வியாதிக்கு இப்போது நான் சற்றும் பயப்படவில்லை. ஏனெனில் அந்த வியாதி ஒரே ஆளுக்கு இருமுறை வராது. அது மறுபடி யிங்குவருவதாயின் வேறு யாருக்காவது தான் வரவேண்டு மென்றாள். அவள் கூறியதன் கருத்து என்ன வென்பதை அமரநாதன் மட்டும் அறியவில்லை. மற்ற ஐவரும் அறிந்துகொண்டு ஒருவரை யொருவர் குறிப்பாய் நோக்கிக் கொண்டார்கள். அதன் பிறகு அவன் மற்றபேரிடமும் பேசினான். அச்சமயம் இராணி தான் அவன் வரும்போது செய்துகொண்டிருந்த கயிறு திரிக்கும் வேலையைச்செய்யத் தொடங்கிக் கொண்டாள்.

அதைக்கண்ட அமரநாதன் "ஆ! திரைச்சீலைக்குக் கயிறு திரிக்கும் வேலையோ ஒரு இராணி செய்யத்தக்க வேலை?'' என்றான். இராணி "ஆ! என் அன்பார்ந்த கணவரே! இக்கயிறு அப்படிப்பட்ட இழிவான விடத் தில் உபயோகமாவதல்ல'' என்றாள். அமரநாதன் "ஆனால் வேறென்ன கௌரவவேலைக் கென்பதை யறியலாமோ?'' என்றான். இராணி "ஆகா! தடையின்றி, இக்கயிறு இரா ணியின் கணவராகிய தங்களைத் தூக்கிற் போடுவதற்கா கவே உபயோக மாவது'' என்று நகைத்துக்கொண்டே கூறினாள்.

அவ்வார்த்தை யவன் மனதிற் சற்று திகிலையுண்டாக்கியது. ஆயினும் கேலிக்கே அவ்வாறு கூறுகிறுளெனக் கருதி "ஆயினும், இது சற்று பயங்கரமான வேடிக்கைப் பேச்சே. இவ்வார்த்தை சித்ராங்கியின் வாக்கினின்றும் வந்திருந்தால் சரியான கேலியென்றே வியப்பில்லாதிருக்கும்" என்ருன்.

சித்ராங்கி:—"அப்போது தாங்கள் இதை உண்மையென்று கவனிக்கமாட்டீர்களே" என்ருள்.

அமரநாதன் "நம் மனைவியின் மனப்போக்கிற்குத் திருப்தியுண்டாகும்படியே இச்சமயம் நடந்துகொள்வது நலமென்றும் நாம் சிம்மாதனத்தில் உட்கார்ந்து இந்தத் துஷ்டப்பயலாகிய டாக்டரையும் பத்மநாயகியையும் ஒழித்துவிட்டால், இராணி இராகவனேடு சோரம் செய்தாளென்ற காரணத்தால் ஒருவினுடியில் இவளைப் பட்டத்தினின்றும் விலக்கிவிடலாம்" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டு, சித்ராங்கியை நோக்கி "சரி, அப்படியாயின் இதை மெய்யாகவே எண்ணிக்கொண்டு என் மனைவியாகிய இராணியின் முன் முழங்காற்படியிட்டுப் பணிந்து "என்னைத் தூக்கிற்போடவேண்டாம். குறைந்தது சமாதான விருந்து முடியும் வரையிலாவது தூக்கிற்போடவேண்டாம்" என்று மனுச்செய்துகொள்ளவேண்டியதே தகுதியென்கிருயோ?" என்ருன். சித்ராங்கி "அப்படிச் செய்வது நலமென்றே கருதுகிறேன்" என்ருள்.

அதற்குள் இராணி நகைத்துக்கொண்டே "என் அன்பார்ந்த கணவரே! அப்படியாயின் அதற்காக மனுச்செய்து கொள்ளவேண்டாம். ஏனெனில் சமாதான விருந்து பூரணமாய் நடந்தேறும் வரையில் உம்மைத் தூக்கிற் போடுவதில்லையென்று நான் இப்போதே வாக்களிக்கிறேன்" என்ருள்.

அமரநாதன் யாவற்றையும் வேடிக்கையாகவே நம்பிக்கொண்டு "கயிறு வேலை முடிந்ததோ?" என்முன். இராணி இதோ இதோ நிமிடம் என்று தான் அப்போது தான் திரித்து முடிந்த கயிற்றைத் தன் பக்கத்தில் சுருட்டி வைத்தாள். அமரநாதன் இராணிக்குச் சந்தோஷத்தையுண்டாக்கக்கருதி அவள் திரித்த கயிற்றை மிக்க அக்கரையோடு கவனிப்பவன்போல் அதையெடுத்துப்பார்த்தான். அது ஏழெட்டடி நீளம் இருந்தது. பட்டுக்கயிற்றின் இடையில் சரிகைகள் பளபளவென்று ஜொலித்தது மிக்க அழகாயிருந்தது. ஆனால் அக்கயிறு மிக்க உறுதியாகவிருந்தது. இவர்கள் இவ்வாறு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கையில் போசன வேளை வந்துவிட்டதால் வேலைக்காரர்கள் வெள்ளி பொன் தாம்பாளங்களில் பலவித உயர்தரமான அறுசுவை உண்டிகள், பலகாரவகைகள், நேர்த்தியான மதுபான வகைகள், யாவும் ஏராளமாய்க் கொண்டுவந்து மேஜைகளின்மேல் வட்டித்தார்கள். உடனே யாவரும் போஜனமருந்த உட்கார்ந்தார்கள்.

அமரநாதன் இராணியின் பக்கலிலும், டாக்டர் தங்கவேலுப்பிள்ளை பத்மநாயகியினருகிலும், சித்ராங்கி புண்ணியகோடிப் பிரபுவின் பக்கத்திலும் அமர்ந்தார்கள். ஸ்திரீக்கு ஆடவன் உபசாரம் செய்யும் அவர்கள் நாட்டு ஆசாரம்போல் அமரநாதன் இராணிக்கு மிக்க அக்கரையோடு உபசாரம் செய்துகொண்டிருந்தான். போஜனம் செய்யும்போது செய்யும் உபசாரமாவது ஆகாரத்தின் நல்ல பாகங்களை யெடுத்தளித்தல் துண்டிக்கவேண்டியவைகளைக் கத்தியால் துண்டித்து எடுத்தளித்தல், தாகத்திற்கு வேண்டும்போது குறிப்பால் அதை யறிந்து எடுத்தளித்தல், அவர்கள் கரத்திலிருந்து ஏதேனும் தவறி விழுந்து

விட்டால் உடனே சட்டென்றதை யெடுத்துக்கொடுத்தல், அவசியமாகும்போது விசிறிகொண்டு விசிறுதல் முதலி யவைகளாகும்.

யாவரும் ஆகாரம் புசித்தானபின் மதுபான மருந் தத்தொடங்கினர்கள். அமரநாதன் "இன்று சமாதான விருந்தருந்துவதால் என் சுகத்திற்காக நீ திராக்ஷரசபா னம் அருந்தவேண்டும்" என்று இராணியை வேண்டிக் கொண்டான். இராணி, "ஆகா! பூரண சந்தோஷத் தோடு செய்வேன். எதோ கிண்ணம் நிறைய வழிய வழியவிடும் என் அன்பார்ந்த கணவரே" என்ருள். அமரநாதனுக்கு மிக்க சந்தோஷமுண்டாய்விட்டது. தான் காலின்மேல் நிற்பதென்றும் தலையின்மேல் நிற்ப தென்றும் அவனுக்குத் தெரியவில்லை. அவன் உடனே பாத்திரத்தில் நிறைய ஒயின்விட்டு இராணியின் கரத்தில் அளித்தான்.

அதன் பிறகு அவரவர்கள் பிரியப்படி குடிக்கத் தொடங்கினர்கள். சற்று நேரத்திற்குள் யாவர் முகங்களும் சிவந்து அவர்கள் மனதில் உற்சாகம் அதிகமாய்விட்டது.

அச்சமயம் இராணி தன் கணவனை நோக்கி, "தங் களுக்கு அந்தக்கொடிய வியாதியைப்பற்றி பயமா யில்லையோ?" என்ருள். அமரநாதன் "பயமில்லையென்று கூறினல் அது வீண் பெருமையாகும். அக்கோரக் காட்சியை யென்னறையிலிருந்தபடி யானும் பார்த்தேன். ஆனல் அது இப்போது நமது நகரை விட்டொழிந்து விட்டதல்லவா?" என்ருன்.

டாக்டர் தங்கவேலுப்பிள்ளை,

"இல்லை பிரபுவே, அது இன்னும் நமது நகர எல்லை யில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதுபோய் விட்டதென்று நினைப்பதற்கில்லை" என்ருன்.

அச்சமயத்தில் சித்ராங்கி "ஏன்? அது மறுபடி நமது அரண்மனைக்கே வந்தாலும் வரக்கூடும்" என்றாள்.

அமரநாதன் "அந்தோ! கடவுளே நம்மைக் காப்பாற்றவேண்டும்" என்றான்.

சித்ராங்கி "தாங்கள் அதற்குப் பயப்படவேண்டிய காரணமேயில்லை" என்றாள். அமரநாதன் ஏன் அப்படிக் கூறுகிறாய் என்றதற்கு அவள் "ஏனென்றால் தாங்கள் தான் தூக்கிற்போடப்படுகிறீர்களே!" என்றாள்.

அமரநாதன் ஒருவிதப்பீதியோடு "சே! இன்னுமா அத்தகைய அசிங்கமான விளையாட்டுப் பேச்சு?" என்றான். சித்ராங்கி "ஆ! அது நேர்த்தியான விளையாட்டாயிற்றே! வேண்டுமாயின் இராணியே கூறட்டும்" என்றாள்.

இராணி:—என் பிரியமான கணவரே! தாங்கள் உண்மையில் எங்கள்கூட்டத்தில் ஒருவராகச் சேர்ந்து கொள்வதாயின் எங்கள் எளிய விளையாட்டில் முழு மனதோடு கலந்து கொள்ளவேண்டும். இது எனக்குப் பிரியமான விளையாட்டே." என்றாள்.

அமரநாதன்:—"ஆ அப்படியாயின் அதற்கு உடன்பட நான் மிக்க சந்தோஷமடைவேன். முன்னமே அந்த விளையாட்டில் நான் இதுகாறும்சேர்ந்திருந்தே னல்லவா?" என்றான்.

இராணி:—"இப்போது என் சொந்தக்கணவர்மேல் நான் மெய்யாகவே சந்தோஷமடைகிறேன். ஆனால் தாங்கள் இதுகாறும் அந்த விளையாட்டில் சேர்ந்திருக்கும் அளவு போதாது. எங்களைப்போல் தாங்களும் பூரணமாய் எங்கள் விளையாட்டில் நுழைய

வேண்டும். எதோ அந்தக் கயிற்றை யெடுத்து வாருங்கள்'' என்ருள்.

அமரநாதன்:—“ஆகா! அதில் இன்னும் என்ன விளை யாட்டிருக்கிறது?'' என்று கூறிக்கொண்டே அக் கயிற்றையெடுத்து வந்து இராணியிடமளித்தான்.

குடித்த வெறியால் இப்போது அவனுக்குச் சந் தேகம் பீதிமுதலிய எதுவும் தோன்றவில்லை. தன் மனைவி யாகிய இராணி நம்மிடம் இவ்வளவு அன்பாய்ப் பேசு கிருளேயென்ற சந்தோஷமே அவனுக்கதிகமாகிவிட்டது. அதனால் அவள் விருப்பப்படி இச்சமயம் நடந்துகொள்ள வேண்டுமென்ற ஒரு எண்ணமே அவன் மனதில் இருந் தது.

இராணி;—“என் ஆசைக்குரிய நாயகரே! இன்று நாம் சமாதான விருந்து கொண்டாடுகிருேம். ஆகை யால் இந்த ஒருவேளை நாமனைவரும் நமது சிறு வயதில் விளையாடியதைப்போல் விளையாடவேண்டு மென்பது எனக்கு மிக்க ஆசையா யிருக்கிறது'' என்ருள்.

அமரநாதன் ஒயின் வெறியால் மிக்க உற்சாகமடை ந்து “ஆகா! உன் பிரியப்படிசெய்ய நான் ஆயத்தமா யிருக்கிறேன், எம்மா திரிவிளையாட்டாயினும் சரி'' என்று கூறிவிட்டு, அவள் அருகில் சென்று குனிந்து “உன் அன் பிருந்தால் போதும்'' என்ருன்.

புருஷத் தன்மையில்லாமல் தனக்குத் துரோகம் செய்த இத்துஷ்டன்மேல் இராணி எவ்வளவோ கோப மும் வெறுப்பும் அடைந் திருந்தாலும், யாவற்றையும் மனதில் அடக்கிக்கொண்டு, “என் அன்பார்ந்த அரசரே! இப்போது நான் ஒரு விளையாட்டிற்கு ஏற்பாடு செய்கி றேன். அதாவது இக்கயிறு இருக்கிறதே. இதை இங்கி

ருக்கும் ஆடவரில் ஒருவர் கழுத்தில் சுருக்குமாட்டிக் கொண்டு நடனம் புரியவேண்டும். அவர்களுக்கு ஒரு பரி சளிக்கிறேன். அதாவது அப்படி நடனம்செய்தோர் இங்கிருக்கும் மாதரில் எவருக்கேனும் ஒரு முத்தமளிக்க லாகும் ” என்றாள்.

நேயர்களே! இச்சந்தர்ப்பத்தில் நாம் இரண்டொரு வார்த்தைகள் கூறவேண்டியது அவசியமாகிறது. இப் போது சித்ராங்கி முதலிலேயே அப்பயங்கரமான வியாதி ஒரே ஆளுக்கு இருமுறைவரா தென்றாள். பிறகு டாக்டர் அவ்வியாதி இன்னும் ஊரைவிட்டுப் போகவில்லையென் றார். இவர்களே மறுபடி யது அரண்மனைக்கேவந்தாலும் வரலாகு மென்றார்கள். இவையாவும் அத்துஷ்டர்களின் தந்திர சாமார்த்தியங்களை நன்றாய் வெளியிடுகின்றன. எவ்வாறெனில், அமரநாதனைத் தாங்கள் கொன்றபின் அவன் கொலைசெய்யப் பட்டதாய் யாரும் ஐயுறாதிருப் பதற்காக, இந்தக்கொள்ளைநோயில் அவன் மடிந்ததாகப் பிரஸ்தாபம் செய்து அதற்குத் தக்க அத்தாட்சிகளை யுண்டாக்கி விடவேண்டு மென்பதே யவர்கள் கருத்து. மனிதனுடைய மனோபாவம் எதையும் செய்ய வல்லது என்ற இரகசியம் டாக்டருக்குத் தெரியும். ஆகையால் முன்னமே அப் பயங்கரமான கொள்ளை நோயென்றால் பயங்கொள்ளும் அமரநாதன் மனதில் “ அந்நோய் இன் னும் நமது நகரைவிட்டுப் போகவில்லை. அது மறுபடி இந்த அரண்மனைக்கே வரினும் வரும்; ஒருசமயம் நமக்கே வரினும் வரும்” என்று அவன் மனதிற் சிந்தனையுண்டாகும் படி செய்து விட்டார்கள். எனெனில் இதனாற் சுலபமாய் அவனுக்கு ஒரு சமயம் மெய்யாகவே அந்த நோய் உண் டாகும்படி செய்யலாகும். இவையாவும் உத்தேசித்தே அக்கொலை பாதகர்கள் அவ்வாறு சம்பாஷித்தார்கள்.

இனி நேயர்களே! முத்தமளிப்பது என்ற விஷயம் இதை வாசிக்கும் நம்மவர்க்கு வியப்பையும் ஐயத்தையும் வெறுப்பையு முண்டாக்கலாகும். ஆனால் அது அவர்கள் ஆசாரத்திற்குச் சம்மதமானதே. இந்தச் சங்கதியைக் கேட்ட அமரநாதன் "இங்கு இருப்பவர்கள் மூன்றே சீமாட்டிகள் அதுவும் உன்னோடு சேர்த்து" என்றான்.

இராணி:—"இச் சந்தர்ப்பத்தில் நான்மட்டும் அதற்கு விலக்கல்ல. நானும் சேர்ந்தவளே" என்றாள்.

உடனே அமரநாதன் அப்படியாயின் நானேயதற்கு ஒப்புக் கொள்கிறேன் என்றான். இப்போது தன் மனைவிக்கு இன்னொருவன் முத்தமளிப்பதா என்ற அபிமான முண்டாய் விட்டதே அவன் ஒப்பியதற்குக் காரணம்.

நேயர்களே! இப்போது இத்தகைய ஆசாரம் மனச்சாட்சிக்கும், இயற்கை யுணர்ச்சிக்கும் முற்றும் விரோதமானது என்பது அங்கை நெல்லிபோல் விளங்குகிறதன்றோ. இத்தகைய ஆசாரம் எங்கேனும் நாகரீகமான ஆசாரமாகுமோ? இத்தகைய ஆச்சரத்தாலேயே அங்கு அத்தகைய கொடிய பாதகச்செயல்களுக் கெல்லாம் வழியுண்டாயிற்று. அக்காலத்தில் அங்கிருந்த இராஜாங்கத்தின் சீர்கேடும் கொஞ்சம் காரணமாயினும் அந்த நாட்டின் மாதர்களைப் பற்றிய ஆசாரமே பெரும்பாலான தீங்குகளுக் கெல்லாம் ஆதிகாரண மென்பது உண்மை.

அமரநாதன் மேற்கண்டவாறு ஒப்புக் கொண்டதும் அரசியிட மிருந்த கயிற்றை வாங்கி ஒருமுனையில் சுருக்கு முடிபோட்டுக் கழுத்தில் மாட்டிக்கொண்டு மற்றக்கயிற்றைக் கீழேதொங்கிப் புரளவிட்டு விட்டு நடனம் செய்ய ஆரம்பித்தான்.

உடனே மற்றபேர் ஒருவர் முகத்தை யொருவர் குறிப்பாய்ப் பார்த்துக் கொண்டார்கள். தங்கள் தந்திரம்

பலித்துப் பிரயத்தனம் கைகூடும் சமயம் நெருங்கிவிட்ட தென்று அவர்களுக்குள் சந்தோஷ முண்டாய் விட்டது. அந்தோ! அப்பரிதாபமான இராஜகுமாரன் இனி மரணத்தி னின்றும் தப்பமுடியாது. தான் இராணிக்குவிரோதமாய்ப் பெரிய சதிசெய்து விட்டு இன்னும் பெருங்கேடு விளைவிக்கச் சமயத்தை யெதிர்பார்த்திருப்பவன் சற்று முன்யோசனை யுடையவனாயின் தன் எதிரிகளிடம் அவ்வாறு நெருங்க மாட்டான். அந்த அழைப்புச் சீட்டைக் கண்டதே யதில் ஏதோ சூதிருக்கிற தென்று சந்தேகித்திருப்பான். அல்லது எச்சரிக்கை யோடேயே யிருந்திருப்பான்.

அமரநாதன் நடனம் செய்யத் தொடங்கிய சற்று நேரத்திற் கெல்லாம் அதிவேகமாய்ச் சுழன்று சுழன்று நடிக்கத் தொடங்கினான். வரவர அவன் முகத்தில் ஒரு வித விகாரமான மாறுதலுண்டாயிற்று. கண்கள் அகன்று வெளியில் பிதுங்கி விழுந்து விடுவனபோற் றோன்றின. அவற்றாலும் அவன்வாயில் நுரைதள்ளத் தொடங்கியதாலும் அவன் ஒருவிதச் சத்தம்போடத் தொடங்கியதாலும் அவனுக்கு உண்மையாகவே அப்பயங்கரமான கொள்ளை நோய்வந்து விட்டதென்று அங்கிருந்தவர்களுக்குப் புலப்பட்டது. இராணி நடுக்கங்கொண்டு அப்படியே சோபாவில் சாய்ந்து விட்டாள். மற்றபேர்களுக்குத் தங்கள் தந்திரமான ஆலோசனையால் எதிர் பார்த்ததைக்காட்டிலும் அதிகமான பலனே கிடைத்துவிட்ட தென்று மிக்க சந்தோஷ முண்டாய் விட்டது.

நேயர்களே! இக்கோரக்காட்சியை விவரித்துக்கூற நமக்குப் பிரியமில்லை. ஆகையால் சுருக்கமாய்க் கூறுகிறோம். அமரநாதனுடைய காலடிச் சத்தத்தையும் அவன் கூச்சல்களையும் கேட்ட வேலைக்காரர்கள் பயந்து

அந்த அறையை நோக்கி ஓடிவந்தார்கள். டாக்டர் தங்க வேலுப்பிள்ளை கோரியதும் எதிர் பார்த்ததும் அதுதான். அவன் உடனே யெழுந்து மிக்க விசனமும் பயங்கரமுமா மான முகத்தோடு துரிதமாய் வாசற்படி வெளியிலேயே அந்த வேலைக்காரரைச் சந்தித்து,

"என் அன்பார்ந்த நண்பர்களே! அந்தக் கோர மான வியாதி மறுபடி அரண்மனைக்கு வந்துவிட்டது. இம்முறை கடவுளே! அமரநாதன் இராஜகுமாரர்..." என்றதே அவர்கள் அய்யோ வென்றலறினர்கள். டாக்டர், "ஆயினும் சித்ராங்கியைக் காப்பாற்றியது போல் இவருக்கு அந்த ஆவேசம் போனதும் தக்க சிகிச்சையும் உபசாரமும் செய்யத் தகுதியான ஆட்கள் அருகிலிருக் கிருர்கள். நீங்கள் செய்யக்கூடிய உதவி ஒன்றுமில்லை. மேலும்...அது தொத்து வியாதி..." என்ருன். இதைக் கேட்டதும் அவர்கள் டாக்டர் நம்மை வேண்டாமென்று கூறியதே போதுமென்று ஓட்டம் பிடித்தார்கள்.

டாக்டர் உடனே கதவை மூடித் தாளிட்டுவிட்டுத் திரையையும் விட்டுவிட்டார். வேலைக்காரர்கள் அமர நாதன் கழுத்தில் தொங்கும் கயிற்றைப் பார்த்துவிட்டால் சந்தேகமான வதந்திகளுக்கு இடமுண்டாயிருக்குமென்றே டாக்டர் அவ்வளவு தந்திரம் செய்தான். தங்கவேலுப் பிள்ளை கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே சென்றபோது அமரநாதன் ஆடியாடிக் குதித்து ஓய்ந்து வாயில் நுரை தள்ளக் கீழே சாய்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு இரைக்கத் தொடங்கினன்.

மறுவினடி புண்ணியகோடி [illegible] புலிபோல் அவன் மேற்பாய்ந்து அவனைப் பூமியில் அழுத்திப் பிடித்துக்கொண்டான். இதைக்கண்ட இராணி கோவென் றலறிக் கரங்களால் தன் முகத்தை மூடிக்கொண்டாள்.

186490

டாக்டரும் பத்மநாயகியும் சட்டென்றெழுந்து ஆயத்த மாய் நின்றார்கள். சித்ராங்கி பேசாமல் ஆசனத்திலேயே யுட்கார்ந்திருந்தாள்.

அதற்குள் புண்ணியகோடிப் பிரபு அமரநாதன் கழுத்திலிருந்த சுருக்குமுடியை நெருக்கிவிட்டான். அச் சமயம் அமரநாதன் புத்தியில் "ஆ! இவர்கள் நம்மைக் கொலை செய்கிறார்கள்" என்றுபட்டது. அவன் உடனே தன் முழுப் பலத்தோடும் உதறிக்கொண்டெழுந்தான். உடனே இரண்டு வாலிபர்க்கும் நேரிட்ட சச்சரவால் இரு வரும் ஒருவரை யொருவர் பற்றிக்கொண்டு கீழே வீழ்ந் தார்கள். புண்ணியகோடி மல்லாந்தபடி கீழும் அமர நாதன் அவன் மேலுமாய் விழுந்தார்கள்.

அச்சமயம் தங்கவேலுப்பிள்ளையும் பத்மநாயகியும் சட்டென்று கயிற்றைப்பிடித்து பலங்கொண்ட மட்டும் இருக்கத் தொடங்கியதும் புண்ணியகோடிப்பிரபு அமர நாதனை நகரவொட்டாது கெட்டியாய்ப் பிடித்துக்கொண் டான். அமரநாதன் நெஞ்சு நெருக்கப்பட்டுச் சுவாசம் தடைப்பட்டு வாய் திறந்துகொண்டு கண்கள் பிதுங்கி விடும்போலிருக்கும் சமயம் இராணி தற்செயலாய் கண் களைத் திறந்து பார்த்துவிட்டாள். உடனே கேட்போர் நடுங்கும்படி அலறிக்கூவியதும் மூர்ச்சையாய் விழுந்து விட்டாள். மறுநிமிடம் அமரநாதன் ஆவி நீங்கிச் சவமாய் வீழ்ந்துவிட்டான்.

டாக்டர் உடனே அவன் கழுத்திலிருந்த கயிற்றைக் கழற்றி மறைத்துவிட்டுச் சாளரத்தைத் திறந்து சவத்தை இழுத்துப் பின்பக்கமிருக்கும் தோட்டத்தில் எறிந்து விடும்படிக்கூற புண்ணியகோடிப் பிரபுவும் ஒரு நிமிடத் தில் அவ்வாறே செய்து முடித்துவிட்டான்.

சாளரத்தின் வழியாய்ச் சுமார் ஐம்பதறுபதடிகளுக்

குக்கீழ் இருக்கும் தோட்டத்தில் எறியப்பட்ட சவம் அங்குபோய்த் தட் என்றசத்தத்தோடு வீழ்ந்தது. மூர்ச்சையாய் வீழ்ந்த இராணிக்குச் சற்று புத்தி சுயாதீனத்திற்கு வரும்போது இச்சத்தம் கேட்டதும் கண்களைத் திறந்துபார்த்தாள். அச்சத்தம் உண்டான காரணம் மனதிற்குப் புலப்பட்டதும் கோவென்றலறிக் கண்ணீர் ஆறாய்ப் பெருகவிட் டழத்தொடங்கினாள்.

இராணி சுபாவத்தில் இரக்கமான மனமும் நல்ல குணமுமுடையவளாயினும் சிறுவயதிலிருந்து துஷ்டர்களுடைய சகவாசத்திலிருந்தபடியால் தன் கணவனைக் கொலைசெய்ய ஒப்புக்கொண்டாள். இப்போது அவள் தன் துயரமனைத்தையும், மனோ வேதனையையும் சகித்துக்கொண் டிருக்கவேண்டியதாயிற்று.

டாக்டர் பத்மநாயகியை நோக்கி "இராணி யழுது கொண்டிருக்கட்டும். அவள் விடும் கண்ணீரால் அவள் மனம் தேறுதலடையும்" என்று கூறிவிட்டு, அவளையும் புண்ணியகோடிப் பிரபுவையும் நோக்கி "சீக்கிரம் என் கூட வாருங்கள். உங்கள் பாகத்தைச் சரியாய் நடியுங்கள் பத்திரம்" என்றுகூறி அவர்களை யழைத்துக்கொண்டு அறையைவிட்டு வேலைக்காரர் இருக்கும் பாகத்திற்குச் சென்றார்.

மூவரும் மிக்க துயரமும் திகிலும் கொண்டவர்கள் போல் "ஐயோ! கடவுளே! என்ன கோரம்" என்று கூவிக்கொண்டே ஓடி வருவதைக்கண்ட வேலைக்காரர்கள் மிக்க பீதியும் குழப்பமுமடைந்து "ஐயோ! என்ன என்ன சம்பவித்தது?" என்று கோஷ்டமிட்டார்கள். நயவஞ்சகப் பரம துஷ்டனாகிய தங்கவேலுப்பிள்ளை, "அய்யோ! கடவுளே! என்னதான் செய்வதோ தெரியவில்லையே. கொஞ்சம் அதிகமாய் ஒயின் குடித்திருந்த

இராஜ குமாரனுக்கு இச்சண்டாள வியாதி வந்து அவஸ்தைப்படவே நல்ல காற்று வரட்டுமென்று சாளரத்தைத் திறந்தோம். அய்யோ எட்டிப்பிடிப்பதற்குள் சாளர வழியாய் எகிரித் தோட்டத்தில் பாய்ந்துவிட்டார். ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்!!" என்று மிக்க கலவரமடைந்தவர்போல் குளறினர். சித்ராங்கி அழத்தொடங்கினள்.

இதைக்கேட்ட ஆட்கள் மிக்க பீதியும் மனக்குழப்பமுமடைந்து ஒரு கூட்டமாய்த் தோட்டத்தை நோக்கி ஓடினர்கள். யாவரும் அங்கு சென்று பார்த்தபோது அமரநாதன் மண்டையுடைந்து மூளைசிதறி முகம் சின்னபின்னமாய் நசுங்கி உருவுமாறிக்கிடந்தான். டாக்டர் மிக்க பரிதாபமான விதமாய்க் குனிந்து இருதயத்தின் மேல் கை வைத்துப்பார்த்து "அய்யோ! பிராணன் போய்விட்டதே" என்று கூவினர். சித்ராங்கி மிக்க பரிதாபமாய் அலறியழுதாள். புண்ணியகோடிப்பிரபு அவளுக்குத் தேறுதல் கூறிக்கொண்டே அவளைப்பிடித்து அழைத்துக் கொண்டு இராணியிருக்குமிடத்தை நோக்கிச் சென்றன்.

உடனே பொருமஞ்சம் கொண்டுவந்து சவத்தை யதன்மேல் வைத்து மேல்மாடிக்கு எடுத்துச்சென்றர்கள். அங்கு செல்லும்போது, அதற்குள் மனதைத்திடப்படுத்திக்கொண்டு சமயோசிதப்படி நடிக்க மனதில் உறுதி கொண்ட இராணி, அறையிலிருந்து வெளியில் வந்தாள். எதிரில் வரும் இவர்களைக்கண்டதும் ஓடிவந்து சவத்தின் மேல் வீழ்ந்து மார்பிலும் முகத்திலும் மோதியறைந்து கொண்டு கோவென்றலறி யழுதாள். அச்சமயம் உண்மையாகவே அவள் மனதின் சுபாவகுணத்தாலுண்டான துயரமே வெளிக் கிளம்பியது. அதனுல் காண்போர்க்கு அவள் துயரம் உண்மையென்றே தோன்றியது.

மறுநாட்காலை நகரமெங்கும் இராணியின் கணவன் மரணம் பெருங்குழப்பத்தை யுண்டாக்கிவிட்டது. எல்லா ஜனங்களுமே அது தற்செயலாய் நேர்ந்த மரணமென்று நம்பவில்லை. கொஞ்சம் சூக்குமம் அறிவுடையோரனை வரும் முணமுணவென்று தலை யசைத்தார்கள். நடுத்தர ஜனங்களும் கீழ்த்தரச்சனங்களும் அரண்மனை முன் வந்து பெருங்கூட்டமாய்க் குழுமிக்கொண்டு இராஜ குமாரன் மரணத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்பட வேண்டு மென்று கூவினார்கள்.

அந்தோ! அதற்குப்பதில் இராகவன் தலைமையின் கீழ் நடத்தப்பட்ட போர்வீரர்கள் இரக்கமின்றி ஜனங் களைக் கத்திகளாலும் ஈட்டிகளாலும் குரூரமாய்த் தாக்க அவர்கள் சிதறி நாற்புறங்களிலும் ஓடிவிட்டார்கள். அச் சமயம் அப்பயங்கரமான கொள்ளை நோய் மறுபடி கிரா மத்தில் மும்முரமாய்க் கிளம்பியதால் ஜனங்கள் அத்திகி லால் இச்சம்பவத்தை யக்கரையாய்க் கவனிக்கவில்லை.

அமரநாதன் மரணசங்கதியைத் துஷ்டகேது கேட் டதும், அவனும் நகரகுருவும் அவர்கள் சதியாலோசனை யில் சம்பந்தப்பட்ட பிரபுக்களும் பேரிடி விழுந்தவர்க ளானார்கள். அவர்களுக்கு அமரநாதன் கொலை செய்யப் பட்டான் என்பது மட்டும் நிச்சயம் என்று தெரியும். முதலில் அவர்களெல்லாம் நாட்டைவிட் டோடிவிட எண் ணினார்கள். மறுபடி சிந்தித்துப் பார்த்து, "மிக்க தந்திர சாலியாகிய டாக்டர் தங்கவேலுப்பிள்ளை, நடந்த இரகசி யச் சதியாலோசனை தனக்குத் தெரிந்திருந்தாலும், அதை வெளியிட மாட்டான், ஏனெனில் அப்படி நடந்திருப்ப தால் அமரநாதன் கொலை செய்யப்பட்டுத்தா னிருப்பா னென்று யாவரும் கருதுவார்களென்று அதை யறிந்தி ருப்பதுபோல் நடந்துகொள்ள மாட்டான்" என்று

தீர்மானித்துக் கொண்டு பேசாமலிருந்துவிட்டார்கள். டாக்டரும் அவர்கள் கருதியபடியே அச்சதியாலோசனையைப்பற்றி ஒரு பிரஸ்தாபமும் செய்யவில்லை. துஷ்டகேதுவும் அவனைச் சேர்ந்தவர்களும் கடைசியில் தக்கசமயம் வாய்க்கும்போது இராணியையும் அவளைச் சேர்ந்த கூட்டத்தையும் அழித்து விடலாமென்று எண்ணியிருந்தார்கள்.

25-வது அத்தியாயம்.

பவழத்தீவிலுள்ள கிழவன் தெப்பம் செய்தல்—கிழவனுடைய மர்மசிந்தனை—இராகவன்மேல் இராணிக்கு மனஸ்தாபம் — இராகவனுக்கும் அவன்தாய்க்கும் விசேஷ சம்பாஷணை.

இப்போது பவழத்தீவில் மிக்க உல்லாசமானருது. கடந்த இரவு காற்றும் மழையும் உக்கிரமாயடித்து இடியும் மின்னலும் தங்கள் அதிகாரங்களைக் குரூரமாய்ச் செலுத்தின. கடல் மலைபோல் பொங்கி அத்தீவையே யடியோடு விழுங்கிவிடும்போலிருந்தது. ஆகவே காலையில் வானம் களங்கமற்று இரமணீகரமான அத்தீவின் காட்சி இளஞ் சூரியனுடைய பொன்மயமான கிரணங்களால் பிரகாசித்துக்கொண்டிருந்தது. பட்சிக் கூட்டங்கள் பன்னிறம் பொருந்திய அழகிய இறக்கைகளை விரித்து அங்குமிங்கும் பறந்துகொண்டும் இனிய கீதங்களைப் பாடிக்கொண்டிருந்தன. இளங்காற்று அங்குள்ள மலர்களின் நறுமணத்தை யெங்கும் வீசிக்கொண்டிருந்தது. வண்டுகளின் நாதமும் பலவித சிறு செந்துக்

களின் சத்தங்களும் ஆகிய இவைகளே யன்றி பயங்கர மான வேறு சத்தம் அங்குகிடையாது.

அத்தகைய தீவிற்கு அரசனே போன்ற நமது முதி யோன் எங்கே என்று நமது நேயர்கள் அறிய விரும்ப லாகும். ஆ! நமது மூதாளன் அதோ தன் குடிசைமாளி கையி லிருந்து புறப்படுகிறான். என்ன ஆச்சரியம்! இப் போது அவன் முகம் முன்போல் துயரமுடையதா யில்லை. அவன் தேகமும் வளைந்தில்லை, நடையும் தள்ளா டிக்கொண் டிருக்க வில்லை.

இப்போதவன் முகத்தில் ஒருவிதச் சந்தோஷம் குடிகொண் டிருக்கிறது. அவன் நன்ருய் நிமிர்ந்து உறு தியாய் நடக்கிறான். அவன் உடை பழைய உடையே யெனினும் முன்போல் கொஞ்சங்கூட. தேகத்தின் எப் பாகமும் கொஞ்சமேனுந் தெரியாமல் மறைந்திருக்கும் படி அவ்வளவு ஜாக்கிரதையாய் அவ்வுடை யணியப்பட் டிருக்கவில்லை. அங்கங்கு காற்றுப் புகும்படியான விதமா யிருக்கிறது. அவன் தன் குடிசையிலிருந்து புறப்பட்டுக் கடலோரத்தை நோக்கி நடந்தான். அங்கு ஒரு பக்கத் தில் கடல் பூமிக்குள் நுழைந்து ஒரு சிறு குடாக்கடல் போலிருக்கிற தென்று முன்பு கூறியிருக்கிறோம். அங்கு கரையோரத்தில் ஏராளமான தென்னமரங்கள் வளர்ந் திருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை கடலின் பக்கமாய்ச் சாய்ந்து வளர்ந்திருக்கின்றன. அந்த விடத் தில் பாறையிலிருந்த ஒரு துவாரத்தி லிருந்து நமது கிழவன் வாள் கோடரி முதலிய சில தச்சுவேலைக் குரிய ஆயுதங்களை யெடுத்துக் கொண்டு கரையோரம் மரங்க ளிருக்கும் இடத்திற்குச் சென்றான். அங்கு முன்னமே சுமார் முப்பது நாற்பது மரங்கள் வெட்டப்பட்டுக் கட லில் விழுந்து மிதந்துகொண் டிருக்கின்றன. ஆனல்

அவைகள் தென்னை பனை நார்களால் பின்னப்பட்ட பல மான கயிறுகளால் வரிசையாக வைத்து அங்கங்கு கட் டப்பட் டிருப்பதால் ஒரு தெப்பமே அங்கு இருக்கிறது எனலாம். அத்தெப்பம் ஒரு நீளமான கயிற்றால் கரையி லுள்ள ஒரு மரத்தில் கட்டப்பட் டிருக்கிறது.

கிழவன் தான் எடுத்துவந்த ஆயுதங்களால் ஒவ் வொன்றாய் நாலைந்துமரங்களை வெட்டினான். அவன் நீரின் பக்கமாய் அதிகமாகச் சாய்ந்திருக்கும் மரங்களாகப் பார்த்தே வெட்டிய படியால், அவை வெட்டப் பட்டதே நேராய்ச் சலத்தில் விழுந்தன. கிழவன் அதன் பிறகு குடாக்கடலில் இடுப்பளவு ஆழத்திற்கு இறங்கி முன்னே தான் வெட்டின மரங்களிலுள்ள பழுத்த தேங்காய்களை யெல்லாம் பறித்துக் கரையில் கொண்டுவந்து சேர்த் தான். அதன் பிறகு அம்மரங்களிலுள்ள பட்டை நார் ஓலை முதலியவற்றையும் அவ்வாறே கொண்டுவந்து கரை யில் குவித்துவிட்டு, மறுபடி நீரிலிறங்கி மரங்களின் சிரங் களைத் துணித்து விட்டான். பிறகு அப்போது வெட்டிய மரங்களின் ஒரு நுனியைத் தெப்பத்தில் கயிற்றால் கட்டி விட்டான். அப்போது பகல் ஒருமணியாயிற்று. வெயில் தீக்ஷணியமா யிருந்தது.

கிழவன் இரண்டு மூன்று தேங்காய்களை யெடுத்துக் கொண்டு மரமடர்ந்த குளிர்ச்சியான ஒரு இடத்திற்குச் சென்றான். தான் சேகரித்த நார்களையும் அங்கு எடுத் துச் சென்றான். முன்னே தேங்காய்களை யுடைத்துப் பசி யாற்றிக்கொண்டு சற்று நேரம் இளைப்பாறிய பின்னர், தான் கொணர்ந்திருந்த நார்களால் பலமான கயிறு திரிக்கத் தொடங்கினான். அவ்வாறு திரித்துக்கொண்டே யிருக்கையில் இவ்வுலகத்தையே ஒரு நொடியில் சுற்றி வரும் வல்லமையுடைய அவன் மனமானது பல்லாயிர

மைல்கள் தூரத்திலுள்ள அவனுடைய ஜன்ம பூமிக்குச் சென்றது.

நமது கிழவன், அனேக வருடங்களாகத் தன் போன்ற மனிதஜன்மத்தின் முகத்தையே காணமல் தனியாக அத்தீவில் வசித்து வந்தாலும் தன் வாலிபகாலத்தில் தான் வசித்திருந்த ஜனநெருக்க முடைய பெரிய அழகிய நகரத்தை மறக்கவில்லை. மனதிற்குப் பலவிதமான அவாக்களையும் தொல்லைகளையும் அளிக்கும் எண்ணிறந்த விஷயங்கள் நிறைந்த அந்நகரம் அவன் மனதினின்றும் நீங்கவில்லை.

"ஆ! நமது நகரம் இப்போது எத்தகைய நிலைமையி லிருக்கிறதோ. எவ்வளவு மாறுதலடைந் திருக்குமோ! நமது சந்ததியார் யார் இருக்கிறர்களோ! நாம் இன்னும் உயிரோடிருக்கையில் நமது புத்திரனும் இருக்கலாகும். ஆயினும் கடவுட்செயல் எப்படியோ; அவனில்லா விடினும் நமது புத்திரனுடைய புத்திரன் முதலியவர்களேனும் இருக்கலாகும். அக்கொடிய சாபத்தில் கண்டிருக்கிற முறைமைப்படி நமது புத்திரனுடைய புத்திரனுக்குக்கூட இந்நோய் வந்திராது. ஆனல் நம்பேரனுக்குப் புத்திரன் பிறந்திருப்பின் அவனுக்குத்தான் அது உண்டாயிருக்கும். அக்கொடியசாபம் நமது குடும்பத்தை விட்டொழிந்த தென்ற சந்தோஷ சமாசாரத்தை நாம்போய்க் கூறுவிடின் பின்னல் அது எப்படியோ திடீலென்று நீங்கிவிட்டதை யறிந்து அவர்கள் வியப்படைவார்கள். ஆனல் காரணம் அவர்களுக்கு விவரமாய்த் தோன்றுது. நாம்போய் அவர்களைக் காண்போமோ......—" என்று சிந்தித்தான். அதற்குள் தான் இப்போ திருக்குமிடத்திற்கும் தன் ஜன்மதேசத்திற்கு மிடையில் இருக்கும் ஆயிரக்கணக்கான மைல்கள் விஸ்தீ

ரணமுள்ள கடலை நினைத்துக் கொண்டு பெருமூச்சு விட்டான்.

மறுபடி "ஆ! என்ன முட்டாள் யோசனை செய்கிறேன். நமக்கு இருந்த பயங்கரமான பெருந்துயரத்தை நீக்கிய பரமதயாநிதியாகிய பகவான் செய்யமுடியாதது ஒன்றுண்டோ! ஆயிரம்பேர் இருக்கும் ஒரு கப்பல் நடுக்கடலில் சேதமடையும்போது, அதிலுள்ள யாவரும் மடியும்போது, தனக்குப் பிரியமான ஒருவனைப் பகவான் காப்பாற்றிவிடவில்லையா! அவரால் நடக்காத விவகாரங்கூட வுண்டோ. மேலும் நமது வியாதியை நீக்கியவரையில் சாபத்தில் கண்ட விஷயம் நிறைவேறியதல்ல. அதைப்போலவே "எவன் நெடுநாள் அந்த வியாதியால் கஷ்டப்பட்டு அது நீங்கப்பெறுகிறானோ, அவனால் அக்குடும்பத்திலிருந்து அவ்வியாதி அடியோடு நீங்கிவிடும்" என்ற மற்ற வாக்கியமும் நிறைவேற வேண்டு மல்லவோ? ஆம். ஆம். ஆண்டவன் தமது காரியத்தை ஒருபோதும் அரைகுறையாய்ச் செய்யமாட்டார்." என்று மன உற்சாகமடைந்து மாலை சுமார் ஐந்து மணிக்குத் தான் திரித்த கயிறுகளை யெடுத்துக் கொண்டு கடலோரம் சென்றான்.

இப்போது நமது முதியோன் மறுபடி ஜலத்தில் இறங்கித் தான் அன்று வெட்டிய மரங்களையும் அத்தெப்பத்தில் சேர்த்து பலமாகக்கட்டி அதன்மேல் நடந்து பார்த்துப் புதிதாக ஒரு கப்பலைச் செப்பனிட்ட ஒருவன் அதன் மேல்தட்டில் முதல் முதல் உலவும்போது எப்படிச் சந்தோஷமடைவானோ அவ்வாறு சந்தோஷமடைந்தான். இத்தகைய தெப்பத்தில் ஏறிக்கொண்டு பல்லாயிர மைல்கள் தூரத்திலுள்ள தன் ஜன்மதேசம் போய்ச்சேர இக்கிழவன் கருதியிருக்கிறான் என்றால்

இதை வாசிப்போர் முதலில் நம்புவது கஷ்டமே. ஆனால் நாம் கூறுவது உண்மையே. ஒவ்வொரு சமயங்களில் அப்படிச்செல்வது ஆபத்தென்று கிழவன் மனதிற்பட்ட போதிலும் அவன் உள்ளத்தில் "இத்தனை வருடங்களாக ஜன சஞ்சாரம் என்பதே யில்லாத இத்தீவில் உன்னைக் காப்பாற்றியதோடு பிறந்தது முதலே உன்னைப்பற்றிய கொடுஞ் சாபத்தின் பயனாகிய பயங்கர நோயை நீக்கிய கருணாநிதியாகிய ஆண்டவன் நீ உன் ஜன்ம தேசம் போய்ச்சேரும்படி உனக்கு உதவி செய்வார்" என்று யாரோ கூறுவது போலிருந்தது. ஆகையால் அவன் நாம் சென்று "சாபத்தில் கூறியபடி நான் நெடுங்காலம் அக்கொடிய வியாதியால் வருந்திக் கடைசியில் கடவுள் என் பிரார்த்தனைக்கிரங்கி அந்நோயை நீக்கியருளினார். அதனால் நமது குடும்பத்தைப்பற்றிய அச்சாபம் இதோடு ஒழிந்து போயிற்று" என்ற சந்தோஷ சமாசாரத்தை நமது சந்ததியாரிடம் கூறவேண்டும் என்று தீர்மானித்தான்.

அப்படகில் அதாவது தெப்பத்தில் ஏறிக்கொண்டாலும் தன் தேசத்திற்கு வழியை அவன் அறிவானா என்று கருதுவீர்கள். முதலாவது உலகில் எந்தப் பாகத்தில் நாம் இருக்கிறோமென்பதே அவனுக்குத் தெரியாது. ஆகையால் எத்திக்கில் தன் தேசமிருக்கிறதென்பதையும் அவன் அறியான். கடவுள் தயவால் நாகரீகமடைந்த ஜனங்கள் வசிக்கும் எந்தத் தேசத்தின் கரையிலாவது போய் சேர்ந்துவிட்டால் பிறகு எப்படியேனும் நமது தேசம் போய்ச்சேரலாம் என்பதே யவன் கருத்து. தன் தெப்பத்தைப் பலமாய்க்கட்டி முடித்துவிட்டு நமது கிழவன் தன் குடிசையை நோக்கிச்சென்றான்.

* * * * * *

அமரநாதன் என்ற இராஜகுமாரன் கொலையுண்டு மூன்று நாட்களாயின. இதுகாறும் கள்ளர் கூட்டத்தை யழிக்கப்போய் அவமானத்தோடு திரும்பிவந்த இராகவன் தன் அறையைவிட்டு வெளிவரவேயில்லை. டாக்டர் தங்கவேலுப்பிள்ளை அவனைக்கண்டு பேசத் தன்னுலான வரை முயற்சி செய்தும் பயன்படவில்லை. அவன் தாயார் அவனைக்காண முயன்றும் அவன் இருக்கும் அறைக்குள் செல்ல முடியவில்லை. இராணி பன்முறை யாட்களை யனுப்பியும் அவன் அவளைக் காணவேனும் வெளிவரவில்லை. அவன் கையாளாயிருந்த அழகப்பன் என்ற சிறுவன் ஒருவன்தவிர வேறு யாருமே அவன் அறைக்குள் நுழைய அனுமதிபெறவில்லை. அதற்குக்காரணம் எனக்குச் சுகமில்லை என்று கூறிக்கொண்டிருந்தான்.

இராணி பலதரம் ஆட்களை யனுப்பிப் பார்த்தபின் கடைசியில் ஒரு கடிதம் வரைந்தாள். இராகவன் அப்போதும் போய் அவளைக்காணவில்லை, பதிலும் எழுதவில்லை. அதனுல் இராணி மிக்க கோபமடைந்தவளானுள். காதலன் என்கின்ற விஷயத்திலே "நம்மை மறந்துவிட்டான். நம்மை யலட்சியம் செய்துவிட்டான். ஒரு சமயம் அவனுடைய காதல் வேறு யார்மேலாயினும் மாறிவிட்டதோ" எனற பொருமையும் மனவருத்தமும் இராணிக்கு உண்டாயின. இராணி என்ற அந்தஸ்தில் நின்றும் சிந்தித்தபோது நாம் கடிதம் எழுதியும் அவன் நம்மை வந்து காணுமல் நமது கட்டளையை யலட்சியம் செய்துவிட்டான் என்று மிகக் கோபமுண்டாய்விட்டது. அவன் தாயாராகிய பத்மநாயகி "அவன் கள்ளரை யழிக்கச்சென்று அபஜெயமடைந்து வந்துவிட்டது அவனுக்குப் பெரிய அவமானமாகத் தோன்றுவதால் அவன் ஒருவர் முகத்தையும் காணக் கூச்சப்பட்டுக்கொண் டிருக்

கிறான். அவன் உம்மை வந்து காணுமலிருப்பதற்கு அதுவே யுண்மையான காரணமேயன்றி வேறில்லை. அவன் தங்கள் மேல் வைத்திருக்கும் அன்பைத் தன்னுயிரினும் அரிதாகப் போற்றுகிறான்......" என்று தன்னுற் கூடிய வரையில் சமாதானம் கூறினுள். ஆயினும் அரசி, தனக்குள் அவன்மேலிருக்கும் மிருக இச்சையாகிய காதல்தான் தன் கோபத்திற்குக் காரணம் என்று அன்னியர் அறியாவண்ணம் மறைத்து, இராணியாகிய தன் கட்டளையை யலட்சியம் செய்ததற்காகவேதான் உண்மையாய் அவன்மேல் மிக்க வெறுப்பும் கோபமும் அடைந்திருப்பவள்போல் வெளிக்கு நடித்துக்கொண்டிருந்தாள்.

பத்மநாயகி தன் புத்திரனுடைய பெருமையையும் கௌரவத்தையும் அதிகமாய் மதிக்கும் சுபாவகுணத்தைப்பற்றித் தான் அறிந்திருக்கிறவரையில் சிந்தித்தபடி. அவன் அவமானத்திற்கஞ்சியே வெளிவராமலிருக்கிறுனென்று மனப்பூர்வமாகவே நம்பித்தான் இராணியிடம் அவ்வாறு கூறினுள்.

டாக்டர் தங்கவேலுப்பிள்ளையோ மனிதர்களின் நெஞ்சாழத்தைச் சூக்ஷுமமாயறிவதில் கைதேர்ந்தவன். ஆகையால், "இராகவன் தோல்வியடைந்து வந்ததற்காக அதைப்பற்றித் தானே பகிரங்கப்படுத்திக்கொள்ள மாட்டான். அதற்கு மாருக அதை அலட்சியமாகவே விவகரித்து விடுவான். ஆகையால் இவன் வெளிவராதிருப்பதற்கு அத்தோல்வி காரணமாகாது. இதில் ஏதோ இன்னும் வெளிவராதமர்மம் இருக்கிறது" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். ஆனுல் அவன் அதை வெளியிற் கூறவில்லை.

நாம் முன் கூறியபடி அமரநாதன் மடிந்த மூன்ருவது

நாள் மாலை சுமார் ஏழுமணிக்குப் பத்மநாயகி தன் அறையில் உட்கார்ந்துகொண்டிருக்கையில் திடீலென்று இராகவன் மெதுவாய் உள்ளே வந்ததையும் கதவை மறுபடி சந்தடி செய்யாமல் மூடுவதையும் கண்டு வியப்பும் அச்சமுமடைந்தாள். அவன் திரும்பித் தன்னை நோக்கி வரும்போது அவன் முகத்தில் உண்டாயிருந்த விகாரமும் பயங்கரமுமாகிய மாறுதலைக்கண்டு திடுக்கிட்டுப் பயங்கொண்டாள். அவன் தன் அருகில் வந்து உட்கார்ந்ததும், "அப்பா! என்ன நீ இம்மாதிரியாயிருக்கிறாய்? ஏன் உன் முகம் இப்படியிருக்கிறது?" என்றபோது, இராகவன் அவள் முகத்தை யுற்று நோக்கினான். பத்மநாயகி "அய்யோ மகனே என்ன? என்னை யேன் இப்படி முறைத்துப் பார்க்கிறாய். ஏன் உன் முகத்தில் இப்படிப் பட்ட மாறுதல் உண்டாகியிருக்கிறது? உன் நடவடிக்கையே யடியோடு மாறிவிட்டிருக்கிறதே ஏன்?" என்றாள்.

இராகவன்:—"என் நடக்கை மாறிவிட்டதாய் நீயேன் கருதுகிறாய்? என்ன காரணம்?" என்றான்.

பத்மநாயகி.—"நீ மூன்று நாட்களாய் உன் அறையிலிருந்து வெளிவராமலிருந்த காரணந்தான். நீ யுண்மையாகவே அக்கள்ளரை யழிக்காமல் திரும்பிவந்துவிட்டதை யிவ்வளவு அவமானமாக மனதில் வைத்துக்கொண்டா இப்படி நடக்கிறாய்?" என்றாள்.

இராகவன் "அய்யோ கடவுளே அது மட்டுமாகவே யிருந்தால் பரவாயில்லையே. நான் சிந்திக்கவேண்டியவை யெவ்வளவோ இருக்கின்றன. உண்மையில் தோல்வியடைந்ததற்காக நான் கருதவில்லை. அதனால் எனக்கு அகௌரவமென்று நான் எண்ணவில்லை. ஏனெனில் என்னோடு வந்த கோழைப்பயல்களில் ஒருவனேனும் முன்னின்று யுத்தம் செய்யாமற் சரணமடைந்துவிட்டால்

அத்தனை ஆயுதந்தரித்த ஆட்களின் முன் நான் ஒருவன் என் செய்யவல்லேன். இதனால் எனக்கு அவமானமுண்டாக ஒருகாரணமுமில்லை. ஆனால் அவன் என்ன சொன்னான்? 'ஆ! சுத்தவீரத்தன்மை ஆயுதப்பயிற்சியிலும் தைரியத்திலும் மட்டுமேயில்லை.' என்று கூறினான். ஆம், அவன் உண்மையே கூறினான். மறுபடி யின்னொன்று கூறினான். 'சுத்தவீரன் தன் கடமையாகக் கவனிக்க வேண்டிய கௌரவம் பொருந்திய விஷயங்கள் சிலவிருக்கின்றன. அவற்றைக் கவனித்துத் தன் கடமைகளைச் செலுத்தாதவன் சுத்த வீரனாகான்' என்றான். ஆம் மறுபடி அவன் கூறியது உண்மையே." என்றான்.

பத்மநாயகி "யார் உனக்கு இத்தகைய விஷயங்களைக் கூறியவன்?" என்று கேட்டதற்கு இராகவன் "கள்ளர் தலைவனாகிய மாயசிங்கன் என்ற வீரன்" என்றான். பத்மநாயகி மிக்க வியப்படைந்து "என்ன? ஒரு கள்ளன் கூறிய வார்த்தைகளா உன் மனதில் இவ்வளவு உறுத்தி வாதிக்கிறது!" என்றாள்.

இராகவன்:—"அம்மா! மாயசிங்கன் கள்ளனானால் ஆகட்டும் அவன் மிக்க பெருந்தன்மையும், உதாரகுணமுமுடைய மகா நல்ல புருடன். அவன் கூறிய விஷயங்கள் எவ்வளவு தூரம் என் மனதில் வேரூன்றியிருக்கின்றனவென்பதை நீயறிந்தால் உண்மையில் மிக்க வியப்படைவாய் என்பதில் ஐயமேயில்லை. அவன் கூறிய உண்மையான விஷயங்கள் என்னையறியாமலே என் மனதில் ஆழ்ந்த சிந்தனையை யுண்டாக்கிவிட்டன. அவை யெத்தகைய விஷயங்களென்பதைப்பற்றி நீயறிந்தால் அப்போது அவற்றைப்பற்றி அலட்சியமாகக் கருதமாட்டாயென்று நினைக்கிறேன்" என்றான்.

பத்மநாயகி:— "அப்படிக் கூறினல் நீ கிழவயது வரு முன்பே கிழவரைப்போல் அற்பவிஷயங்களுக்கெல் லாம் பயந்துகொள்கிருய் என்று கருதுவேன்" என்ருள்.

இராகவன்:—"அம்மா! அவன் கூறிய விஷயங்கள் என் மனதில் ஆழ ஊன்றிப்போ யிருக்கிற வரையில் நீ என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டாலும் எனக்கு அவசியமில்லை" என்ருன்.

பத்மநாயகி:—" மகனே! உனக்கென்ன வெறிபிடித்து விட்டதா? இராஜ்ஜிய பரிபாலனம் செய்யும் ஒரு அரசி உன் காதலால் நீ தன்னைக் காணவில்லை யென்று எவ்வளவோ மனவருத்தப்பட்டுக்கொண்டு மிக்க கஷ்டத்தோடு தன் மனேபாவங்களை யெல் லாம் மறைத்து வைத்துக்கொண் டிருக்கிருள். ஒரு விஷயத்தில் பார்க்கப் போனல் சிம்மாதனமே காலியா யிருக்கிறது. நீ கொஞ்சம் யோசனையோடு நடந்து கொண்டால் இந்த இராஜ்ஜியத்தின் அரச சனை இராணியின் பக்கலில் சிம்மாதனமேறி அர சாளலாமே. இதையெல்லாம் அடியோடு மறந்து விட்டாயோ? அய்யோ!" என்ருள்.

மிக்க கௌரவமான பதவியும், அதிகார அந்தஸ்தும் அடையவேண்டு மென்று பேராவலுடைய இராகவன் இத்தூண்டுதலான மொழிகளைக் கேட்டதே மாயசிங்கன் கூறிய கெம்பீர மொழிகளைத் தட்சணம் மறந்து,

"ஆ! நான் என்ன முட்டாள்தனம் செய்து விட் டேன். இதையடியோடு மறந்து விட்டேன்." என்று தன்னைத்தானே நொந்து கொண்டு, ஆசனத்தை விட் டுத்துள்ளி யெழுந்தான். இதைக்கண்ட அவன் தாயார். "ஆ! இவனுக்குச் சரியான மந்தரம் போட்டோம்"

என்று தனக்குள் நினைத்துச் சந்தோஷ மடைந்து "முட்டாள் பையனே! ஒரு கிரீடமே கைக்கெட்டும் தூரத்திலிருக்கும்போது கொஞ்சம் முட்டாள் தனத்தால் எவனேனும் அதை யிழந்து விடுவானே? அதோடு நாடாளும் அழகில் மிக்க யௌவன இராணியை மனைவியாகப் பெறுவதையும் இழந்து விடுவானே. சீக்கிரம் சென்று இராணியைக் கண்டு அவள் கோபத்தைத் தணித்து மன்னிப்புப் பெற்றுக்கொள்" என்றாள்.

இராகவன். "காரியம் மிஞ்சிவிடவில்லையே" என்றான். தாயார் அவள் உன்மேல் அளவுகடந்த காதல் கொண்டிருக்கிறாள். ஒருபயமுமில்லை. சீக்கிரம் செல்" என்றாள்.

இராகவன் இதோ செல்கிறேன் என்று கூறித் தன் தாயாரிடம் விடைபெற்றுச் சென்றான். பத்மநாயகி நடந்த விஷயத்தால் இனித் தன் புத்திரன் அடையக்கூடிய உயர் பதவியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே யிருந்தாள்.

26 - வது அத்தியாயம்.

டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் பத்மநாயகியும்—மிக்க மர்மமானவார்த்தை—இராகவனும் இராணியும்—தகாத ஆலோசனைகள்—அபூர்வமாக திடுக்கிடும் தோற்றம் கவசமணிந்த உருவம்—நிலவறையில் ஆச்சரியத் தோற்றம்.

இராகவன் தன்தாயைவிட்டுச் சென்று சுமார் அரை மணிநேரம் கழிவதற்குள் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை பத்மநாயகி யிருக்கும் அறைக்குள் வந்தான்.

அவன் முகம் ஏதோ விசனத்தால் வாட்டமடைந் திருக்கிறதென்று பத்மநாயகி மனதிற்பட்டது. டாக்டர் அவனைக் கண்டதும் அவள் முகத்தில் ஏதோ சந்தோஷக்குறியிருப்பதை யுணர்ந்து " "உன் புத்திரன் இங்குவந் திருந்தானோ? வென்றான்.

பத்மநாயகி " ஆம். வந்திருந்து இப்போது தான் இராணியிடம் சென்று அவள் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்படி புத்திசொல்லி யனுப்பினேன் " என்றாள். டாக்டர் நல்லவேலை செய்தாய் என்றான். பத்மநாயகி " அவன் இதுவரையில் வெளிவராத காரணம் வெட்கத்தாலல்ல. அக்கள்ளன் இவன் மனதிற் படும்படி என்னமோ கூறி யிருப்பதாய்த் தெரிகிறது " என்றாள்.

டாக்டர் " நடக்கும் நாழிகையில் என் வேவு ஆளை நான் சந்தித்தேன். மாயசிங்கன் இராகவனிடம் கூறத் துணிந்த சங்கதிகள் யாவும் கேள்விப்பட்டேன்" என்றான். பத்மநாயகி:—" அவன் கூறியசங்கதி யென்ன? உமக்கே மனக்கலக்கத்தை யுண்டாக்கக்கூடிய அத்தகைய சங்கதிகளா?" என்றாள்.

டாக்டர் "அவன் மாயசிங்கன் கூறிய எல்லாச் சங்கதிகளையும் என்னிடம் புகன்றான். மாயசிங்கன் என்பவன் யாரென்று நான் அறிந்து கொள்ளப் போதுமான அவ்வளவு கூறினான்." என்று பத்மநாயகியி னருகிற்சென்று அவள் சிரசின்மேல் கரத்தைவைத்து, குரு உபதேசம் செய்வதுபோல் குனிந்து அவள் செவியில் மாயசிங்கன் என்பவன் வேறு யாருமல்ல-அவன்......" என்று அப்புறம் ஒருவார்த்தை மெதுவாய்க் கூறினான்.

அதைக் கேட்டதே பத்மநாயகி " அய்யோ " என்றலறி மூர்ச்சையடைந்து சவம்போல் வீழ்ந்து விட்டாள்.

* * * * *

தன் தாயின் அறையைவிட்டுப் புறப்பட்ட இராகவன் தன் அறைக்குச் சென்று நல்ல உடையணிந்து கொண்டு இராணியின் அறைக்குச் சென்றான். இராணி தன் அறையில் தனியே உட்கார்ந்து கொண்டிருந்தாள். இராகவன்மேல் அவளுக்கிருக்கும் காதல் அளவுகடந்தது. ஆயினும் அவன்மே லுண்டான சந்தேகமும் பொறாமையுமே இப்போது அவன்மேல் அதிக கோபத்தை யுண்டாக்கி யிருந்தது.

இராகவன் அறைக்குள் சென்றதும் அவள்முன் முழங்காற்படியிட்டு "மகாராணி என்னை மன்னிக்க வேண்டும்" என்றான். இவன் இவ்வாறு கூறியதனாலேயே "நான் செய்தது தப்பிதந்தான்" என்று அவனே பூரணமாய் ஒப்புக்கொண்டதாக இராணியெண்ணிக்கொண்டாள். அதனால் அவளுக்கு மிக்ககோபமுண்டாகிச் சட்டென் றெழுந்து சாளரத் தருகில்போய் நின்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

இராகவனுக்கு முதலில் மிக்க கோபம் வந்தது. ஆனால் அதற்குள் தான் இராஜாவாகலாமே யென்ற நினைப்புவந்துவிட்டது. ஆகையால் எழுந்து அவள் அருகிற்சென்று "என்மேல் உண்மையில் குற்றமொன்றுமில்லை" யென்று அவளுக்குச் சமாதான வார்த்தைகள் கூறினான். இராணி, தன்னை இவன் வேணுமென்றே யலட்சியம் செய்யவில்லை யென்று நம்பத்தக்க காரணம் ஒன்று கூறினாலன்றிச் சீக்கிரத்தில் சமாதான மடைகிறவளாகத் தோன்றவில்லை. ஆகையால் தன் தாயார் ஐயுற்ற காரணத்தை நினைத்துக்கொண்டு "ஆ! உண்மைக் காரணத்தைக்கூற எனக்கு நாணமா யிருக்கிறது. என் கூட வந்த கோழைகளாகிய போர்வீரர்களின் துரோகத்தால் நான் கேவலமான! அக்கள்ளரால் அவமானப் படுத்தப்

பட்டுத் தோல்வியோடு திரும்பிவர நேர்ந்தது....” என்று
தந்திரமாய்த் துயரத்தோடும் நாணத்தோடும் கூறுபவன்
போல் கூறினன்.

இம்மொழிகளைக் கேட்டதே இராணியின் கோபம்
எங்கோபறந்து விட்டது. அதன் பின்பு இருவரும் சற்று
நேரம் சந்தோஷமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்
கள். அச்சமயம் இராகவன் விசனமான முகத்தோடு
இராணியை நோக்கி “என் உயிருக் குயிராகிய காத
லியே! உன் விஷயத்தில் எனக்கு ஒரு பெரியவியாகூலம்
உண்டாகிவிட் டிருக்கிறது. ஏனெனில் கடைசியில் நான்
உன்னைவிட்டுப் பிரிந்துவிட வேண்டிய காலம் வந்துவிட்
டால் நான் எப்படி உயிர் வைத்துக்கொண் டிருப்பேன்”
என்றான். இதைக்கேட்ட இராணி “ஆ என்காதலனே!
நான் அரசியாயிருக்கிறேன். என்னுடைய நண்பர்களை
என்னிட மிருந்து பிரிக்கக்கருதும் தீரர்கள் யாருளர்?”
என்றாள்.

இராகவன் “நீ இராணியா யிருப்பதனாலேயே பயப்
படுகிறேன். ஏனெனில் நீ உன் கணவனுக்காகத் துக்கங்
கொண்டாடுங் காலம் கழிந்ததே உன் குடிகள் உனக்
குத் துணையாக விருந்து இராஜ்ஜியத்தைப் பாதுகாப்ப
பதற்காகத் தகுந்த கல்வியறிவும் பலமுமுடைய ஒருகண
வனைத் தங்கள் இராணி வரித்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்பார்கள்” என்றான்.

இராணி “அது உண்மைதான். ஆனால் என்காத
லனே! என் அன்பில் நீ பூரண நம்பிக்கை வைக்கவில்
லையா? ஏன் நான் கூறுகிறமாதிரியே நடக்கலாகும்,
இல்லை, நிச்சயமாகவே நடக்கும். என் குடிகள் நான்
ஒரு கணவனைத் தெரிந்து மணம்புரிந்து கொள்ள வேண்டு
மென்று கோருவார்கள் தான். அப்போது நான் என்

600 008
186490

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் இவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர்; பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தினபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளு ஜூலை மீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ...	4	0	தினகரசுந்தரி	1	0
கற்கோட்டை ...	2	0	பத்மாஸனி ...	0	14
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
சுவர்ணாம்பாள் ...	0	12	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடையசரித்திர உபதேசங்கள்	1	12	அமராவதி 2 பாகமும்	4	0
			சகோதரவாஞ்சை	0	6
			ஹை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.